ஜுவல் லேண்ட் ஜுவலரி
வழங்கும
அரியதோர் சந்தர்ப்பம்
உங்களுக்குப் பிடித்தமான தங்க நகைகளை வாங்கி மாதாந்த தவணை முறையில் பணம் செலுத்தலாம். முழு விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளவும்.
ஜுவல் லேண்ட் (பிரைவேட்) லிமிட்.
447, மருதானை ரோட், கொழும்பு-10
தொலைபேசி- 699326 — 685910

செய்தி இதழாக பதிவு பெற்றது
# தினபதி
ரூ 3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6556 1990 ஏப்ரல் 4 புதன்கிழமை ★ ★ ★ தினபதி

அசல் 22 கரட்
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
இன்றே விஜயம செய்யுங்கள்
JEWEL LAND (pvt) LTD
No 447. Maradana Road, Colombo 10.
DEALERS IN JEWELLERY
தொலைபேசி- 699326 — 685910

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு பெற

# மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சி

## அதற்கென சட்டம் இயற்றி அதிகாரசபை அமைக்கப்படும்

### புதிய அமைச்சர் பிரேமச்சந்திர தகவல்

கொழும்பு, ஏப்ரல் 3

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் மாணவர்கள் நல்லவேலைவாய்ப்பு பெறுவதற்கு வசதியாக அவர்களுக்கு நவீன தொழில் நுட்பப் பயிற்சி வழங்கப்படும். அதற்காகச் சட்டம் கொண்டுவந்து அதிகார சபையும் அமைக்கப்படும்.

மேற்கண்டவாறு தொழில் மற்றும தொழிற் பயிற்சி புதிய அமைச்சர் திரு ஜி எம பிரேமச்சந்திர கூறினார்.

உயர்கல்வியைத் தொடரத் தகுதி பெறாதவர்களுக்கும தகுதி இருந்தும பல்கலைக்கழகங்களில் சேர முடியாமல் போனவர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப் படும.

தொழிற் பயிற்சி அதிகார சபையை அமைப்பதற்கு வழி செய்யும சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும என்றும அமைச்சர் சொன்னார்.

அவர் மேலும கூறியதாவது—

இளைஞர்கள் அமைதியின்மை குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கு இணங்கவே இளைஞர்களுக்கும யுவதிகளுக்கும மேற்கண்ட வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

முதற்படியாக தற்போது நகர்ப்புறங்களில் மட்டுமே இயங்கி வரும தொழில் நுட்பக் கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் விரிவுபடுத்தப்

நோன்பு பெருநாளை முன்னிட்டு

## முஸ்லிம்களுக்கு சம்பளம் 19க்கு முன் வழங்கவும்

சோமண்ணை



வடக்கு, கிழக்கிலை எல்லாருக்கும போதுமெண்ட மனம என்று போக்குவரத்து மந்திரி நினைக்கிறாராக்கும்—

தடுத்து வைக்கப்பட்டிருந்த

## பல்கலைமாணவர் 8 பேர் விடுதலை

கொழும்பு ஏப் 3

பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

றுஹுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவர்கள் வெலிசறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குற்ற மற்ற மாணவர்களை விடுவிக்கும நடவடிக்கையின் கீழ் இம மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஸ—மு)

சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்திருந்த

## ராஜீவை தாக்கிய படை வீரர் விஜித ரோஹன விடுதலை

கொழும்பு, ஏப். 3

இந்திய முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை தாக்கிய கடற்படை வீரர் விஜய முனி விஜித ரோஹன டி சில்வா நேற்றுக் காலை விடுதலை செய்யப்பட்டார்.

ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட 700 கைதிகளுள் இவரும ஒருவராவார்.

விடுதலை செய்யப்பட்டது குறித்து அறிவிக்கப்பட்டவுடன் மேற்படி கடற்படை வீரர் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட ஏனைய 699 கைதிகளுடன் நேற்றுக் காலை வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து வெளியேறினார்.

திரு ராஜீவ் காந்தி இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்

(2 ஆம பக்கம பார்க்க)

## சபை கூட்டத் தொடர் இன்று ஜனாதிபதியால் ஆரம்பம்

கொழும்பு, ஏப் 3

தற்போதைய நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் முதலாவது அமர்வு இன்று ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவினால் சமபிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம செய்து வைக்கப்படும.

இன்று நாடாளுமன்றத்திற்கு

பீரங்கி வேட்டுகளும தீர்க்கப் படும.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம திரு நிஹால் சென

(2 ஆம பக்கம பார்க்க)

## கல்முனையில் கடைகள் தற்செயலாகவே எரிந்தன

### ஆயுதக் குழுக்கள் பொறுப்பல்ல என்று புலிகள் விளக்கம்

கொழும்பு, ஏப். 3

கல்முனையில் 8 கடைகள் தற்செயலாகவே எரிந்தன. அதற்கும ஆயுதக் குழுக்களுக்கும சமபந்தமில்லை. எந்த ஒரு ஆயுதக் குழுவும கடைகளை எரிக்கவில்லை. இப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அமபாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் தினபதிக்குத் தெரிவித்தார்.

கல்முனையில் 8 கடைகள் எரிந்தது பற்றி கடந்த சனிக்கிழமை தினபதியில் வெளிவந்த

(2 ஆம பக்கம பார்க்க)

## இன்றைய கூட்டத் தொடர்

ஸ்ரீ. ல. சு. க. கலந்து கொள்ளாது

## முஸ்லிம்களுக்கு சம்பளம் 19க்கு முன் வழங்கவும்

### பிரதமரிடம் அஸ்வர் கோரிக்கை

கொழும்பு ஏப் 3

ரமழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணி புரியும் முஸ்லிம் ஊழியர்களுக்கான ஏப்ரல் மாத சம்பளத்தை 19 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் நிதி அமைச்சரும் பிரதமருமான திரு டி பி விஜேதுங்காவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்-

கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமான நோன்பு ஏப்ரல் 27 ஆம

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய டாக்டர்கள் 523 பேர் கடமை

கொழும்பு ஏப் 3

புதிதாக பயிற்சியை முடித்துக் கொண்ட 523 டாக்டர்கள் நாளை 5ஆம் திகதி முதல் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்-

இவர்களது நியமனம் குறித்த சம்பந்தப்பட்ட ஆஸ்பத்திரி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மா. சபை உறுப்பினரை ஆஜராக்க ஆட்கொணர்வு மனு தாக்கல்

கொழும்பு, ஏப

ஆயுதம் தாங்கிய குழுவினரால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டு பின்னர் கல்முனை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினரை நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்ய வேண்டும்-

இப்படிக் கோரும் ஆட்கொணர்வு மனு ஒன்று மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது-

கல்முனை ஆஸ்பத்திரியில் இருந்து காணாமற் போனதாகக் கருதப்படும் முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபை உறுப்பினர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

நகரப்புறங்களில் மட்டுமே இயங்கி வரும் தொழில் நுட்ப, கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் விரிவுபடுத்தப்படும்-

ஆரம்ப மற்றும் உயர் பிரிவு என இரு பிரிவுகளில் பயிற்சிகள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹ்ர் முடிவு | — 4-34 |
| ஸுபஹ் | — 4-49 |
| சூரிய உதயம் | — 6-09 |
| ளுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-22 |
| மஃரிபு | — 6-21 |
| இஷா | — 7-41 |

தாசவினால் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இன்று நாடாளுமன்றத்திற்கு வருகை தரும் ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற முன்றலில் செங்கம்பள வரவேற்பளிக்கப்படும்.

முப்படைகளின் அணி வகுப்பு மரியாதையுடன் ஜனாதிபதியை கௌரவிக்கும் முகமாக பீரங்கிப் படையினரால் 21 மரியாதை

## 16 விசேட ரயில்கள் சேவைக்கு ஏற்பாடு

கொழும்பு, ஏப் 3

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 16 விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 10 சேவைகள் தென் மாகாணத்திற்கானவை. 4சேவைகள் மலையகத்திற்கானவை. இரண்டு வட பகுதிக்கானவை.

12 சரக்கு ரயில் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

6ஆம் திகதியும் 12 ஆம் திகதியும் காங்கேசன் துறைக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பிலிருந்து தூர இடங்களுக்கு

## 250 மேலதிக பஸ்கள் விசேட புத்தாண்டு சேவை

### ஆயினும் வடக்கு கிழக்கிற்கு எதுவும் இல்லை

கொழும்பு, ஏப் 3

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொழும்பிலிருந்து தூர பகுதிகளுக்கு சுமார் 250 மேலதிக பஸ்கள் போக்குவரத்து சபைகளால் சேவையில் ஈடுபடுத்தப்படும்,

ஆனால் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மேலதிக நீண்ட தூர பஸ் சேவைகளை நடத்தும் உத்தேசம் இப்போதைக்கு இல்லை,

போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்கான நீண்ட தூர விசேட பஸ் சேவைகள் எதிர்வரும் 6 திகதி முதல் 13 ஆம திகதி வரை நடைபெறும்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய கூட்டத் தொடர்

### ஸ்ரீ. ல. சு. க. கலந்து கொள்ளாது

கொழும்பு, ஏப் 3

இன்று காலை நடைபெறும் இரண்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர் அங்குரார்ப்பண வைபவங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம பிகள் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்துள்ளனர்-

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் நேற்றுக் காலை நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற இக் கட்சி எம பிமாரின் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட ஏகோபித்த தீர்மானத்தின் பேரில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது- த

(2 ஆம் பக்கம் பார்க்க)

கிழமை தினபதியில் வெளிவந்த

(2 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலை புலிகள் நினைவு ஸ்தூபி

திருகோணமலை ஏப் 2

திருகோணமலையில் வீர மரணம் எய்திய 22 தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவாக ஞாபகார்த்த ஸ்தூபி ஒன்று அமைக்கப்படும்.

திருகோணமலை சிவன் கோயில் முன்றலில் ஞாபகார்த்த ஸ்தூபிக்கான அடிக்கல் நடும

(2 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை மாவட்டத்தில்

## அன்னை பூபதி தியாகத் திருநாள்

திருகோணமலை ஏப் 3

அன்னை பூபதி கணபதிப்பிள்ளை தியாகத் திருநாள் நேற்று முன்தினம் 2ஆம் திகதி முதல் திருகோணமலை மாவட்டத்தில் விரிவாக கொண்டாடப்படுகிறது-

திருகோணமலை நகர் எங்கும வாழை மரங்களினாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன- சகல சந்திகளிலும அன்னை பூபதியின் உருவப் படங்களும பூரண கும்பங்களும வைக்கப்பட்டுள்ளன-

கடந்த இரண்டாம திகதி திரியாயில் அன்னை பூபதி அஞ்சலிக் கூட்டமும அன்னையரின் உண்ணாவிரதமும பண்ணிசை நிகழ்ச்சிகளும இடமபெற்றன-

இதே போன்று திருகோண

(2 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புத்தாண்டு தேசிய விழா

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் சிங்கள புதுவருடம தேசிய விழாவாக கொண்டாடப்படும-

இதனையொட்டி இம்மாவட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# கைப்பணி துறைக்கு இன்று
# சிறந்த சந்தை வாய்ப்புகள்

## விருது வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஏப் 3

கைப்பணித்துறையை ஒரு நசிந்த பாரம்பரியக் கலையாகக் கருதி ஆதரவளித்து ஊக்குவித்த காலம் முடிவடைந்து விட்டது. இன்று இத்துறை சந்தை வாய்ப்புகள் நிறைந்த ஒரு வர்த்தகமாக விளங்கி வருகிறது.

ஆகவே 21 ஆம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவேற்றும் சவாலை ஏற்ற கைப்பணிக் கலைஞர்கள் தொழிலாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

லக்சல நிறுவனத்தின் 25 ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக முதுபெரும் கைப்பணிக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச அரங்கில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி திரு பிரேமதாச இப்படிக் கூறினார்.

ஜனாதிபதி அங்கு உரையாற்றிய போது மேலும் கூறியதாவது—

எமது கைப்பணிப் பொருட்களுக்கு புதிய வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளைத் தேடிக் கொள்ள முடியும். ஆனால் சர்வதேச சந்தைத் தரத்துக்கு ஈடு கொடுக்கக் கூடியனவாக எமது கைப்பணிப் பொருட்களின் தரம் அமைந்திருக்க வேண்டியது அவசியம். ஆகவே ஏற்றுமதிக்கான கைப்பணிப் பொருட்களின் வடிவமைப்பும் அலங்காரங்களும் வர்த்தக நோக்குடையனவாக இருத்தல் வேண்டும்.

பாரம்பரிய அல்லது இன அம்சங்களை அதிகம் பிரதிபலிக்கக் கூடிய வடிவமைப்புகள் சர்வதேச சந்தைக்கு ஏற்றவையாக இருப்பதில்லை. ஆகவே வர்த்தக நோக்குடைய வடிவமைப்பு, அலங்காரம், தரம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எமது கைப்பணியாளர்கள் இவ்வாறான ஏற்றுமதிக்கான பொருட்களை உருவாக்க வேண்டுமானால் அவர்களுக்கு வர்த்தகத் தேவைகளை ஒட்டிய வழிகாட்டல் அவசியம். எவ்வாறான பொருட்கள் தயார் செய்யப்பட வேண்டுமென கைப்பணி சபையே தீர்மானித்து உற்பத்தியாளர்களிடம் விட வேண்டும்.

கைப்பணிக் கலைஞர்களுக்கு நிபுணத்துவ சேவை, கடன் வசதி, தொழில் நுட்ப உதவி ஆகியவை வழங்கப்படுவதோடு உற்பத்தியான பொருட்கள் கொள்வனவு செய்யப்படும் என்ற உறுதியும் அளிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி கைப்பணித் துறையின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு ஆனந்த குமாரசாமியும் காரணமாக இருந்தார் என்று குறிப்பிட்டு அவரது சேவையை நினைவு கூர்ந்தார்.

[ல—032]

## அதிகாரி இன்று அமைச்சு பணியை ஆரம்பிப்பார்

கொழும்பு, ஏப் 3

புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூக சேவை அமைச்சராக பதவியேற்றுள்ள திரு ஏ எம் எஸ் அதிகாரி இன்று நான்காம் திகதி சுபநேரமான காலை எட்டரை மணிக்கு புதிய அமைச்சில் தனது பணியை ஆரம்பிப்பார்.

(ல-ந-032)

## குடும்ப சுமையினால் விரக்தி:
# ரயில் முன் பாய்ந்த மனைவியை காப்பாற்ற முயன்ற கணவனும் பலி

கொழும்பு, ஏப் 3

வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்ய முயன்ற மனைவியைக் காப்பாற்றச் சென்ற கணவனும் ரயிலால் மோதுண்டு மரணமானார்.

இந்த மனதை உருக்கும் சம்பவம் பாணந்துறையில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது—

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவால் குடும்பத்தை நடத்த முடியாத நிலையில் மனைவி ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முயன்றுள்ளார்.

மனைவியைத் தடுப்பதற்காக கணவன் முயன்ற சமயமே இருவரும் ரயிலால் மோதுண்டு மரணமானார்கள்.

மனைவி அந்த இடத்திலேயே மரணமானார். படுகாயமுற்ற கணவன் பாணந்துறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின் மரணமானார்.

இறந்தவரின் மைத்துனரும் ரயில் சாரதியும் சாட்சியமளித்தனர்.

மரண விசாரணையை பாணந்துறை, தொட்டமுன திடீர் மரண விசாரணை அதிகாரி நடத்தினார்.

சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பளித்தார்.

[ல—ழ]

## நித்திரையிலிருந்த நபர் குத்திக் கொலை

தம்பலகாமம் ஏப் 2

நித்திரையில் ஆழ்ந்திருந்த நபர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 30 ஆம் திகதி இரவு பிரெட்றிக் கோட்டைக்குள் நடைபெற்றுள்ளது.

கச்சேரி வாசலில் காவலாளியாகக் கடமை புரிந்த டபிள்யூ ஏ வசந்த (26) என்பவரே குத்திக் கொலை செய்யப்பட்டவராவார்.

இவரைக் குத்தியதாகச் சந்தேகிக்கப்படும் கச்சேரி ஊழியர் ஒருவர் பலரால் தாக்கப்பட்டார்.

காவலாளி கடமை முடிந்து தனது அறையில் நித்திரையில் இருந்த போதே சந்தேக நபர் அங்கு சென்று பாண் வெட்டும் கத்தியால் அவரைக் குத்தினார் என்று கூறப்படுகிறது.

தனிப்பட்ட குரோதமே கொலைக்குக் காரணம் என சந்தேகிக்கப்படுகிறது. (ல—288)

## இன்றைய கூட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கலந்து கொள்ளும் அரசாங்க வைபவங்களை பகிஷ்கரிப்பது என்று ஸ்ரீ ல சு க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததே.

இந்தத் தீர்மானம் குறித்தும் இன்று நாட்டில் நிலவும் நிலைமைகள் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் தீர்க்கமாக மீளாய்வு செய்யப்பட்டன.

குறிப்பாக இன்று அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் ஜனநாயக விரோத செயல்கள், மனிதப் படுகொலைகள் கடத்தல் மற்றும் மனித உரிமை மீறல் செயல்கள், மக்கள் மீது ஏற்படும் வாழ்க்கை செலவினங்கள்.

நாட்டின் [illegible] அச்சுறுத்தல் ஏற்படும் [illegible] இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகள்.

[illegible] குறித்து இந்தக் கூட்டத்தில் [illegible] தெரிவித்தார்.

[illegible] காரணங்களை முன்வைத்து இன்னும் [illegible] மன்றக் கூட்டத் தொடரின் [illegible] வைபவங்களில் [illegible] கொள்வதில்லை என முடிவு செய்துள்ளனர் என்று அந்த பேச்சாளர் தெரிவித்தார்.

(ண—வ)

## ராஜீவை தாக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தத்தில் கைச்சாத்திடுவதற்காக கடந்த 1987 ஜூலை 29 ஆம் திகதி கொழும்புக்கு வந்தார் என்பது தெரிந்ததே.

திரு ராஜீவ் காந்திக்கு இதையடுத்த ஜூலை 30 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையின் முன்னாக முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை ஒன்று அளிக்கப்பட்டது.

அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டுச் சென்று கொண்டிருந்த திரு காந்தியை அணிவகுப்பில் கலந்து கொண்ட பிரஸ்தாப கடற்படை வீரர் தனது துப்பாக்கியின் அடிக்கட்டையால் தாக்கினார்.

இதனையடுத்து இந்த கடற்படை வீரர் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டார்.

திரு ராஜீவ் காந்தியை தாக்கியமை மற்றும் கடற்படைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமை போன்ற இரு குற்றச்சாட்டுகளின் [illegible]

என்றும் இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடற்படையில் தொலைத் தொடர்பு தொழில் நுட்பவியலாளராக கடமையாற்றிய விஜித ரோஹண, காலி பூசா எனும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

கிந்தோட்டை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர், பாடசாலையை விட்டு வெளியேறியவுடன் கடற்படையில் சேர்ந்தார். (ண—ர)

## திருமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மரதன் ஓட்டம், சைக்கிள் மற்றும் மாட்டு வண்டிச் சவாரி, கிரிக்கெட் — கரபந்தாட்டம், இன்னிசை — கவிதை — நாடகம் வழுக்குமரம் ஏறுதல், கயிறு இழு [illegible]

## விடுதலைப் புலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழா கடந்த திங்கட்கிழமை 2ஆம் திகதி கோலாகலமாக நடைபெற்றது;

பிரபல வர்த்தகரான டொலர் ஏஜன்ஸி அதிபர் ஸ்தாபிக்கான அடிக்கல்லை நாட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர்களும் பொது மக்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(ண-ய-287)

## அன்னை பூபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவு எழுச்சி இயக்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை திருகோணமலை சிவன் கோயில் முன்றலில் அன்னையர் முன்னணியின் உண்ணாவிரதமும் பஜனையும் நடைபெறும்.

(ண—ய—287)

## வடக்கு கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொஹமட் யூனூஸ் லெப்பே மொஹமட் மன்சூர் சார்பாக அவரது சகோதரர் மொஹமட் கலீல் இம்மனுவை தமது சட்டத்தரணி நாளிக பத்மசேனவின் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இம் மனுவில் கல்முனை மாவட்ட ஆஸ்பத்திரியின் மாவட்ட மருத்துவ அதிகாரியான டாக்டர் (திருமதி) சிவநாதன், சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

காணாமற் போனவர் கல்முனை அஸ்பத்திரி முதலாம் இலக்க வார்ட்டில் 834/90 ஆம் பதிவு இலக்கத்தின் கீழ் சேர்க்கப் [illegible]

பெரேரா ஆகியோர் எதிர்வரும் 30 ஆம் திகதி பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டும் என அழைப்பாணை விடுத்தனர்.

மனுதாரர் சார்பாக சட்டத்தரணிகள் ராவிப் ஹக்கீம், எஸ் எம் எம் பஷீர், எம் எம் அப்துல் சலாம் ஆகியோர் சட்டத்தரணி நாளிகா பத்மசேனவின் அனுசரணையுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

(ண—032)

## 16 விசேட ரயில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ரயில் சேவைகள் நடை [illegible]

10,27க்கு மாத்தறையை சென் [illegible]

## மாணவர்களுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கப்படும்.

பயிற்சியை முடித்துக் கொள்பவர்களுக்கு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய டிப்ளோமா பட்டங்கள் வழங்கப்படும்.

நவீன முறையிலான தொழில் நுட்பவியலாளர்களுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பற்றாக்குறை நிலவுகிறது.

இந் நிலையை முற்றாக நீக்கும் பொருட்டு பயிற்சி பெற்ற தொழில் நுட்பவியலாளர்களை உருவாக்குவதற்காகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

[உ—ர]


## இன்றைய திரைகளில்

10 வது வாரம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
கடைசி வாரம்
2-30 6-00. 9-30

லிடோ
(யாழ்நகர்)
10-30. 2-00. 6-00

பிரபு · அமலா

காணாமற் போனவர் கல்முனை அஸ்பத்திரி முதலாம இலக்க வார்ட்டில் 834/90 ஆம பதிவு இலக்கத்தின் கீழ் சேர்க்கப் பட்டார்-

அஸ்பத்திரிக்குச் சென்று பார்த்த போது அவர் அங்கே இருக்கவில்லை- அவர் எங்கே என்பதை அஸ்பத்திரி அதிகாரிகளினால் கூற முடியவில்லை-

கல்முனை அஸ்பத்திரிக்கு பொறுப்பான முதலாம பிரதி வாதியான மருத்துவ அதிகாரி இவர் காணாமற் போனதற்கு பொறுப்பேற்க வேண்டும்-

அதுவே மேன்முறையீட்டு மன்றுமா நீதிமன்றத்தில் நிறுத்தப்படி நீதிமன்ற முதலாம பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டும்-

செலவுத் தொகையை வழங்கும்படி தீர்ப்பளிக்க வேண்டும்-

இப்படி மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரியிருக்கிறார்-

இம் மனுவை ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள் விஜேரத்ன மற்றும டப்ளியூ என் டி

## கல்முனையில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

செய்தி தொடர்பாகவே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எட்டு கடைகளும எப்படி எரிந்தன என்பதையும அவர் விளக்கினார்.

சந்தைச் சதுக்கத்தின் பின்புறமாக உள்ள ஓலைக் கொட்டில் கடைகளில் வாழைப்பழம விற்கப்படுகிறது.

சமபவ தினத்தன்று ஒலைக் கொட்டில் கடை ஒன்றில் வாழைக் குலைகளுக்குப் புகை மூட்டப்பட்டது. அப்போது தற்செயலாகத் தீ மூண்டு பரவியது. அதனாலேயே கடைகள் எரிந்தன.

இதுதான் நடந்தது. மற்றப் படி கடைகள் எரிந்த சமபவத்துக்கு [illegible] எதுவித தொடர்பும் இல்லை. இப்படி கரிகாலன் தொலைபேசி மூலம தினபதிக்குத் தெரிவித்தார். (உ-404)

# 16 விசேட ரயில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ரயில் சேவைகள் நடைபெறும.

ஒரு ரயில் இரவு 8 மணிக்கு கொழுமபிலிருந்து புறப்பட்டு காலை 7-25க்கு காங்கேசன் துறையை சென்றடையும.

காங்கேசன்துறையில் இருந்து மாலை 5-45க்கு புறப்படும ரயில் அதிகாலை 2-55க்கு கொழுமபு வரும.

விசேட ரயில் சேவைகளின் விவரம கீழே தரப்பட்டிருக்கிறது.

இந்த மாதம 7, 8 9 10 ஆம திகதிகளில் நடைபெறும சேவைகள.

கொழுமபு கோட்டையில் இருந்து அதிகாலை 3 மணிக்கு புறப்படும ரயில் மாலை 4-20க்கு பண்டாரவளையை சென்றடையும,

பண்டாரவளையில் இருந்து காலை 8.10க்கு புறப்படும ரயில் மாலை 5-25க்கு கொழுமபு கோட்டையை வந்தடையும.

கொழுமபிலிருந்து மற்றொரு ரயில் அட்டனுக்கு நடைபெறும, அது காலை 11 மணிக்கு கொழுமபிலிருந்து புறப்படும, மாலை 5-30க்கு அட்டனுக்குச் செல்லும,

அட்டனில் இருந்து அதே ரயில் இரவு 8.30க்குப் புறப்பட்டு அதிகாலை 3.50க்கு கொழுமபை வந்தடையும.

காங்கேசன்துறையில் இருந்து மாலை 5-45 க்குப் புறப்படும ரயில் அதிகாலை 2.55க்கு கொழுமபுக்கு வரும.

6 ஆம திகதி காலியிலிருந்து விசேட ரயில் ஒன்று கொழுமபு வருகிறது.

அது மாலை 4மணிக்கு அங்கிருந்து புறப்படும இரவு 7.55க்கு கொழுமபுக்கு வரும.

7 8 9 ஆகிய திகதிகளில் தென் பகுதிக்கான சேவைகள்-

காலை 6.15க்கு மருதானையில் இருந்து புறப்படும ரயில் காலை 10.27க்கு மாத்தறையை சென்றடையும.

மாத்தறையில் இருந்து பகல் 12.50க்கு புறப்படும ரயில மாலை 4.50 க்கு கொழுமபு மருதானைக்கு வரும.

மற்றொரு ரயில் காலை 9.50க்கு புறப்பட்டு பகல் 12.46க்கு காலியை சென்றடையும,

காலியில் இருந்து மாலை 4 மணிக்கு கொழுமபுக்கு ஒரு ரயில் வருகிறது. அது மாலை 6.40க்கு மருதானைக்கு வரும.

மாத்தறையில் இருந்து காலை 7.05க்கு புறப்படும மற்றொரு ரயில் காலை 11.20 க்கு மருதானைக்கு வந்துசேரும.

அதே போல மருதானையில் இருந்து மாத்தறைக்கு காலை 11.30 செல்லும ரயில் மாலை 3.45 க்கு மாத்தறையை சென்றடையும.

10 11 12 ஆம திகதிகளில் நடைபெறவிருக்கும விசேட ரயில் சேவைகள்-

மருதானையில் இருந்து காலை 8.40க்கு காலிக்கும காலை 9.50க்கு மாத்தறைக்கும என இரண்டு ரயில்கள் சேவையில் ஈடுபடும.

மாத்தறையில் இருந்து மாலை 2.40க்கு புறப்படும ரயில் ஒன்று இரவு 7.10க்கு மருதானைக்கு வந்து சேரும. (ண-ற)

## புதிய டாக்டர்கள்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்தினருக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது-

சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்-

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தற்போது நிலவி வரும டாக்டர்கள் தட்டுப்பாடு இந்தப் புதிய நியமனங்களை அடுத்து பெருமளவில் நிவர்த்தி செய்யப்படும என எதிர்பார்க்கப்படுகிறது- (ண-ர)

திரு ராஜீவ் காந்தியை தாக்கியமை மற்றும கடைப்படைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமை போன்ற இரு குற்றச்சாட்டுகளின் பேரில் இராணுவ நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

குற்றவாளியாகக் காணப் பட்ட இவருக்கு ஆறு வருட கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக் கப்பட்டது.

அத்துடன் இவரை கடற்படையில் இருந்து விலக்க வேண்டும

மரதன் ஓட்டம், சைக்கிள் மற்றும மாட்டு வண்டிச் சவாரி, கிரிக்கெட் - கரபந்தாட்டம, இன்னிசை - கவிதை - நாடகம வழுக்குமரம ஏறுதல், கயிறு இழுத்தல் - ஆசிய போட்டிகளும அழகு ராணிப் போட்டியும நடைபெறும-

இதற்கான ஏற்பாடுகளை திருகோணமலை அரசாங்க அதிபர் திரு தே பி விஜயகோன் உதவி அரசாங்க அதிபர் திரு தே வீரசிங்கம ஆகியோர் மேற்கொண்டிருக்கின்றனர்- (ண-ய-287)

# 250 மேலதிக...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

15 ஆம திகதி முதல் 19 ஆம திகதி வரை வெளி மாவட்டங்களில் இருந்து கொழுமபுக்கு பிரயாணிகளை ஏற்றி வருவதற்காக இவை சேவையில் ஈடுபடுத்தப்படும.

6ஆம திகதி 50 பஸ்களும 7ஆம திகதி 100 பஸ்களும என ஆரமபிக்கப்பட்டு 12ஆம திகதி 250 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும வகையில் விசேட சேவை பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும.

கொழுமபு தெற்கு மற்றும கொழுமபு வடக்கு பிராந்தியப் போக்குவரத்து சபைகளே இந்தச் சேவைகளை நடத்தவுள்ளன,

இந்த இரண்டு பிராந்தியப் போக்குவரத்து சபைகளால் நடத்தப்படும குறுகிய தூர சேவைகளுக்கான பஸ்கள் இதற்காக உபயோகிக்கப்படும.

குறுகிய தூர சேவைகள் பாதிக்கப்படாத வகையிலேயே விசேட சேவைகள் நடத்தப் படும.

சுமார் 1000 தனியார் பஸ்களும நீண்ட தூர சேவைகளுக்காக ஈடுபடுத்தப்படும.

இப்படி அந்த அதிகாரி கூறினார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு நீண்ட தூர பஸ் சேவைகளை நடத்தும உத்தேசம இல்லையா எனக் கேட்டதற்கு, "இப்போதைக்கு அவ்வாறான உத்தேசம இல்லை. தேவை ஏற்பட்டால் அப்போது நடவடிக்கை எடுக்கப்படும" என அவர் பதிலளித்தார். (ண-ற)

## சபை கூட்டத்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

விரட்ன பிரதமர் திரு டி பி விஜேதுங்க, சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகமமது ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்பர்.

9 மணி 42 நிமிடத்திற்கு நாடாளுமன்ற செயலாளர் நாயகம இரண்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் முதலாவது அமர்வு ஆரமபிப்பதற்கான ஜனாதிபதியின் பிரகடனத்தை சபையில் வாசிப்பார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி திரு பிரேமதாச அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்துவார். இதனை தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வு ஒத்தி வைக்கப்படும. (ண-ய)

உருவாக்குவதற்காகவே இத்திட்டம நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும அமைச்சர் குறிப்பிட்டார்- [உ-ர]

## சமய நிகழ்ச்சிகள்

### ஹல்துமுல்லை அடிக்கல் நடும் விழா

கொழுமபு, ஏப் 3

அப்புத்தளை - ஹல்துமுல்லை ஸ்ரீ தேவி கருமாரி அமபாள் ஆலய புதிய மண்டபத்திற்கான அடிக்கல் நடும விழா எதிர்வரும 9 ஆம திகதி திங்கட்கிழமை நடைபெறும-

கலாசார தகவல்துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்கு பண்டார அடிக்கல்லை நடுவார்.

அன்றைய தினம விசேஷ பூஜைகளுடன் நண்பகல் அன்னதானமும வழங்கப்படும- [ல-ர]

## முஸ்லிம்களுக்கு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

திகதி முற்றுப் பெறுகிறது- அன்றைய தினத்தை நாடெங்கிலும உள்ள முஸ்லிமகள் ரமழான் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர்-

வழமையாக அரசாங்க ஊழியர்களுக்கான சமபளம் பிரதி மாதமும 25ஆம திகதியே வழங்கப்படுகிறது-

எனவே அரச மற்றும கூட்டுத்தாபனங்களில் பணிபுரியும முஸ்லிம ஊழியர்களுக்கான சமபளத்தை இமமாதம 19 ஆம திகதியோ அல்லது அதற்கு முன்னரோ வழங்க திறைசேரிக்கு உத்தரவிடுமபடி அல்ஹாஜ் அஸ்வர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டிருக்கிறார் (ண-ய)


(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00

பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

**பூ... பூவா பூத்திருக்கு**

(கலர்)

17 வது வாரம

ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30 6-00

மிட்லண்ட்
(நாவலப்பிட்டிய)
10-30, 2-00, 6-00, 9-00

சாந்தி
(மட்டுநகர்)
2-30, 6-30

ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த

**ராஜாதி ராஜா**

(கலர்)

18 வது வாரம

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00

கிங்ஸ்
(பதுளை)
10-30, 2-30, 6-00

நியூ மெஜெரியல்
(இரத்தினபுரி)
10-30, 2-30, 6-00, 9-00

கார்த்திக் - குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த

**வருஷம் 16**

(கலர்)

# லட்சுமி மகள் ஐஸ்வர்யா வீட்டை விட்டு வெளியேற்றம்

கவிதசித்ரா பிலிமஸ் படம "நியாயஙகள் ஜெயிக்கட்டும".

இந்தப் படத்தின் மூலமே நடிகை லட்சுமியின் மகள் ஐஸ்வர்யா கதாநாயகியாக அறிமுகம ஆகிறார்.

இதில் சிவகுமார் நேர்மையான அரசியல்வாதியாக, அமைச்சர் வேடம ஏற்றுள்ளார். அவருடைய மனைவியாகவும, பத்திரிகை ஆசிரியராகவும லட்சுமி நடிக்கிறார்.

இவர்களின் குடும்ப நண்பராக பொலீஸ் கமிஷனர் வேடத்தில் சிவச்சந்திரன் நடிக்கிறார்.

லட்சுமியும, சிவகுமாரும மகள் ஐஸ்வர்யாவிடம "உன் பெயருக்கு வீடு வாங்கி இருக்கிறோம. இதோ பத்திரம" என்று கொடுக்கிறார்கள்.

ஐஸ்வர்யா "என்னை இப்போதே பிரிக்க பார்க்கிறீர்களா? நான் திருமணம செய்து கொண்ட பிறகும உஙகளுடன் தான் இருப்பேன்" என்று கூறி பத்திரத்தை பெற்றோர்களிடமே திருப்பிக் கொடுத்து விடுகிறார்.

சில நாட்கள் கழித்து சிவகுமார் மீது கொலை பழி விழுகிறது.


தந்தையை கொலைகாரர் என்று நமபி ஐஸ்வர்யா வீட்டை விட்டு வெளியேற முயற்சிக்கிறார்.

அவரிடம லட்சுமி தனது கணவர் நிரபராதி என்று வாதாடுகிறார். ஆனால் ஐஸ்வர்யா அதை நமபாமல் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறார்.

தந்தையை கோர்ட் கூண்டில் நிற்க வைத்து அவருக்கு எதிராக வழக்காடும வக்கீல் ஆகிறார்.

இந்தப் படத்தில் நாகேஷ், எஸ் எஸ் சந்திரன், ஜெய் கணேஷ், கோவை சரளா, ராஜலட்சுமி, ஜெயபாலா, ஸ்ரீபாலா மற்றும பலரும நடிக்கிறார்கள்.

(ல—10)



மகள் ஐஸ்வர்யாவுடன் லட்சுமி, சிவகுமாரும துணைக்கு நிற்கிறார். (ல—10)

# மதிய போசனப் பணம் உரியவரிடம் கையளிக்க

## —பணிப்பு—

வறக்காப்பொளை மார்ச் 2

மாணவர்களுக்கு மதிய போசனத்தின் நிமித்தம வழஙகப்படும பணம எவ்வித காரணம கொண்டும வேறு வேலைகளுக்காக பயன்படுத்தப்படக் கூடாது- அப்பணம ஒவ்வொரு மாணவர்களினதும பெற்றோர் அல்லது பாதுகாவர்களிடமே கையளிக்கப்பட வேண்டும என்று பாடசாலை அதிபர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்-

தற்போது அதிகமான பாடசாலைகளில் மதியபோசனத்தின் நிமித்தம மாணவர்களுக்கு தினமொன்றுக்கு மூன்று ரூபா வீதம பணம வழஙகப்படுகிறது-

இப்பணத்தைச் சில பாடசாலை அதிபர்கள் பாடசாலைகளுக்கான முன்னேற்றப் பணிகளில் செலவிட முயன்றுள்ளனர்-

சில அதிபர்கள் தத்தம பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சஙகஙகளின் அனுமதியுடன் இப்பணத்தை பாடசாலை மாணவர்களின் நன்மை கருதிச் செலவிட்டுள்ளனர்-

இதே நேரம இவ்வாறு மாணவர்களின் பணம மாணவர்களின் நன்மைக்காகச் செலவிடப்படுகிறது என்ற சாக்கில் சில இடஙகளில் இப்பணம துஷ்பிரயோகமும செய்யப்பட்டுள்ளதாக அமைச்சுக்குப் புகார்கள் கிடைத்துள்ளன-

சில இடஙகளில் மதிய போசனப் பணத்தைத் தப்பான முறையில் சில அதிபர்கள் கையாடி வருவதாகவும புகார்கள் கூறப்பட்டு வருகின்றன-

இதனால் தற்போது எந்தப் பாடசாலையிலும எதுவித காரணம கொண்டும மாணவர்களுக்கான மதியபோசன பணத்தை வேறு எந்த வேலைகளுக்கும பயன்படுத்தக் கூடாது என்று அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்-

இப்பணம பிரதி மாதமும பெற்றோரின் கையொப்பம பெற்று நேரடியாகவே அவர்களிடம கையளிக்கப்பட வேண்டும என்று அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்-

இதே நேரம பணம வழஙகுவதற்குப் பதிலாக பாடசாலைகளிலேயே சத்துள்ள உணவு வகைகளை வழஙகி வரும பாடசாலைகள் தொடர்ந்தும அவ்வொழுஙகை மேற்கொள்ள அனுமதி வழஙகப்பட்டுள்ளது-

(ல—333)

# அன்னை பூபதி

## நினைவாக திருமலையில் பல நிகழ்ச்சிகள்

தமபலகாமம் ஏப் 2

உண்ணாவிரதம இருந்து உயிர்த் தியாகம செய்த அன்னை பூபதியின் நினைவாக பல்வேறு எழுச்சி நிகழ்ச்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவில் திருகோணமலை அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது-

திருகோணமலை நகரில் எதிர் வரும ஏப்ரல் 15 ஆம திகதி முதல் 19 ஆம் திகதி வரை சிவன்கோவில் வீதியில் உண்ணாவிரதம அனுஷ்டிக்கப்படும-

மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமஙகளில் ஏற்கனவே எழுச்சி இயக்கஙகள் ஆரமபிக்கப்பட்டுள்ளன-

உண்ணாவிரதம அனுஷ்டித்தல், வீர உணர்வூட்டும பாடல்களை இசைத்தல், வீர உரைகளை நிகழ்த்துதல் ஆகிய நிகழ்ச்சிகள் இடமபெற்று வருகின்றன-

திரியாய், குச்சவெளி, குமபுறப்பிட்டி, குறக்கக்கண்டி, கோபாலபுரம, நிலாவெளி, சாமபல்தீவு, ஆத்திமோட்டை, மாஙகாணாய, ஆகிய கிராமஙகளில் உண்ணாவிரதம உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன-

ஏனைய கிராமஙகளில் இம மாதம 15 ஆம திகதிவரை நிகழ்ச்சிகள் இடமபெறும என அன்னையர் முன்னணி தெரிவிக்கின்றது-

(ல—238)



அக்கரைப்பற்று உதவி அரசாஙக அதிபர் ஜனாப் ஏ அப்துல் மஜீட் திரை நீக்கம செய்து வாசிகசாலையை திறந்து வைப்பதை படத்தில் காண்க- படத்தில் இயக்கத் தலைவர் ஜனாப் எம ஏ அபுல்ஹசன், செயலாளர் ஜனாப் எம ஏ எம மொகிதீன், பொருளாளர் ஜனாப் ஐ எல் எம ஹனீபா, சமூகசேவை உத்தியோகஸ்தர் ஜனாப் எம ஏ எம ஹாசிம, பகுதி உத்தியோகஸ்தர் ஜனாப் ஏ எம ஜஃபார் ஆகியோரும காணப்படுகின்றனர்-

(ல—035)

(படம- எம ஏ பகுர்தீன்)

# கார்த்திக்கின் ஜோடி சித்தாரா



கார்த்திக்

கே பாலச்சந்தரின் கவிதாலயம நிறுவனம கார்த்திக் கதாநாயகனாக நடிக்க "உன்னை ... என்று

படித்து மகிழ்கிறார் அவருடைய மகள் சித்தாரா.

தனக்கு துப்பு கொடுக்கும கார்த்திக்தான் இவ்வளவு புகழ் கிடைக்க காரணம என்கிறார். ராதாரவி.

அதற்காக கார்த்திக்கை தன் வீட்டுக்கு விருந்து சாப்பிட அழைக்கிறார்.

விருந்துக்கு வரும கார்த்திக் தனது காதலர்தான் என்பதை அறிந்து சித்தாராவும, தனது காதலிதான் பொலீஸ் இன்ஸ்பெக்டரின் மகள் என்பதை அறிந்து கார்த்திக்கும ஆச்சரியப்

ராதாரவி கார்த்திக்கிடம தனது மகள் தினமும கல்லூரியில் இருந்து தாமதமாக வருவதாகவும, அவள் யாரையாவது காதலிக்கிறாளா? என்பதைக் கண்டுபிடித்து சொல்லுமபடியும கூறுகிறார்.

அதைக் கேட்டு கார்த்திக் அதிர்ச்சி அடைகிறார்.

வேகமாக வளர்ந்து வரும இந்தப் படத்துக்கு இளையராஜா இசை அமைக்கிறார்.

கிரேசி மோகன் வசனம எழுதி இருக்கிறார். நிர்வாக தயாரிப்பு "கவிதாலயா" ந...

# நூல்நிலையங்களை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

## திறப்பு விழாவில் உதவி அரச அதிபர்

அக்கரைப்பற்று ஏப் 2

வாசிகசாலைகள் ஒரு மனிதனின் அறிவை விருத்தி செய்யக் கூடியன எனவே இவ்வாறு கிராமஙகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள வாசிகசாலைகளை பொது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் மிகவும பிரயோசனமான முறையில் உபயோகிக்க வேண்டும-

இவ்வாறு கூறினார் ...

சாலையில்லாக் குறையை "செடோ" இயக்கத்தினர் தீர்த்து வைக்குமுகமாக வாசிகசாலை யொன்றை ஸ்தாபித்தனர்-

இந்நிலையத்தின் வைபவ ரீதியான திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது- இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாப் அப்துல் மஜீட் ...

## பதில் ஊழியருக்கும்



கார்த்திக்

கே பாலச்சந்தரின் கவிதாலயம நிறுவனம கார்த்திக் கதாநாயகனாக நடிக்க "உன்னை சொல்லி குற்றமில்லை" என்ற படத்தை தயாரித்து வருகிறது.

பொலீஸ் அதிகாரியான ராதாரவியை பற்றி பத்திரிகைகளில் வந்திருக்கும செய்திகளை

விருந்துக்கு வரும கார்த்திக் தனது காதலர்தான் என்பதை அறிந்து சித்தாராவும, தனது காதலிதான் பொலீஸ் இன்ஸ்பெக்டரின் மகள் என்பதை அறிந்து கார்த்திக்கும ஆச்சரியப் படுகிறார்கள்.

ராதாரவி முன் ஒருவரை ஒருவர் தெரியாதது போல் நடிக்கிறார்கள்.

விருந்து சாப்பிடும போது

அதிர்ச்சி அடைகிறார்.

வேகமாக வளர்ந்து வரும இந்தப் படத்துக்கு இளையராஜா இசை அமைக்கிறார்.

கிரேசி மோகன் வசனம எழுதி இருக்கிறார். நிர்வாக தயாரிப்பு "கவிதாலயா" நடராஜன்.

நாசர், சார்லி, வாத்தியார் ராமன், குயிலி, புதுமுகம அல்லி ஆகியோரும இந்தப் படத்தில் நடிக்கிறார்கள்.

[ல—10]

## நளினியின் அண்ணன் கதாநாய[கனா]கிறார்

ஒலிமபிக் சினி ஆர்ட்ஸ் பட நிறுவனத்தினர் "யார்" கண்ணன் டைரக்ஷனில் "பூச்சூட்டும நேரம" என்ற படத்தை தயாரிக்கிறார்கள்.

இந்தப் படத்தில் நடிகை நளினியின் அண்ணன் ஜெகன் கதாநாயகனாக அறிமுகம ஆகிறார்.

சிவகுமார் – மஞ்சுளா முக்கிய வேடம ஏற்க, சித்தாரா, விஜய ரேகா, ஜெயசித்ரா, விஜய லலிதா, கவுண்டமணி, செந்தில் மற்றும பலரும நடிக்கிறார்கள்.

இந்த படத்தின் படப்பிடிப்பு நாகர்கோவில், முட்டம, கீரிப் பாறை, திற்பரப்பு, பூதப்பாண்டி கன்னியாகுமரி மற்றும திருச்செந்தூர் உட்பட முருகன் எழுந்தருளியுள்ள ஆறுபடை வீடுகளிலும நடைபெற்றது.


கே சுப்பாராஜ் எழுதிய கதைக்கு ஜெயராமமூர்த்தி வசனம எழுதியுள்ளார்.

பாடல்கள் – இசையை கஙகை அமரன் கவனிக்கிறார்.

ராஜு ஒளிப்பதிவு செய்கிறார்.

திரைக்கதை – டைரக்ஷனை "யார்" கண்ணன் கவனிக்கிறார்.

(ல-10)



நளினி

## தினபதி சினிமா

## முக்கிய வேடத்தில் ராஜலட்சுமி

கருமாரி கந்தசாமி வழங்க காந்திமதி அமமன் மூவீஸ் என்ற பட நிறுவனம தயாரிக்கும படம "பொலீஸ் விசாரணை".

இதில் பானுசந்தர், சுரேஷ் இருவரும இணைந்து நடிக்கிறார்கள். சுரேஷுக்கு ஜோடியாக அஸ்வினி நடிக்கிறார். இவர்களுடன் சஙகராபரணம ராஜலட்சுமி முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

மருதை பரணி வசனம எழுதுகிறார். ராஜ்கோட்டி இசை அமைக்கிறார். கதை, திரைக்கதை, டைரக்ஷன்: எஸ் ரஙகராஜ்.

எஸ் மீனாட்சி அமமாள் ராஜ் முகுந்தன் இணைந்து தயாரிக்கிறார்கள்.

(ல—10)

[...] நிகழ்த்துதல் ஆகிய நிகழ்ச்சிகள் இடமபெற்று வருகின்றன– திரியாய், குச்சவெளி, குமபுறுப்

[...] வாசிகசாலைகள் ஒரு மனிதனின் அறிவை விருத்தி செய்யக் கூடியன எனவே இவ்வாறு கிராமஙகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள வாசிகசாலைகளை பொது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் மிகவும பிரயோசனமான முறையில் உபயோகிக்க வேண்டும–

இவ்வாறு கூறினார் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் ஜனாப் ஏ அப்துல் மஜீட்–

அக்கரைப்பற்று புதுப்பள்ளியடி என்னுமிடத்திற்கு நீண்டகாலமாக இருந்து வந்த வாசிகசாலை [...] வைக்குமுகமாக வாசிகசாலையொன்றை ஸ்தாபித்தனர்–

இந்நிதியத்தின் வைபவ ரீதியான திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது– இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாப் அப்துல் மஜீட் மேற்கண்டவாறு தெரிவித்தார்–

விவசாய சேவை திணைக்களத்தின பிரிவு உத்தியோகஸ்தர் ஜனாப் ஏ எம ஜப்பார் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாப் அப்துல் மஜீட் குறிப்பிட்டதாவது–

"வாசிப்பு ஒருவனை பூரண மனிதனாக மாற்றும இந்தப் பழக்கம எமமத்தியில் குறிப்பாக எமது இளைஞர்கள் மத்தியில் இல்லாமையாலேயே இன்று அவர்கள் வழிதவறிச் செல்கின்றனர்– எமது இளைஞர்கள் வீணாக பொழுதைக் கழிப்பதற்காக வீதிகளிலும, சந்திகளிலும நின்று அரட்டையடித்துக் கொண்டிருக்கின்றனர்– இதனால் வீண் சச்சரவுகளும பிரச்சினைகளும கூட உருவாகின்றன–

இப்பழக்கத்தை நாம மாற்ற வேண்டும– எமது ஓய்வு நேரஙகளை வாசிகசாலைகளில் போக்கும ஒரு பழக்கத்தை நாம ஏற்படுத்திக் கொள்ள வேண்டும– இதனால் எமது அறிவு விருத்தியடைகின்றது–

நாட்டில் நடப்பவை உலகில் நடப்பவை எல்லாம எமக்கு அறியக் கிடைக்கின்றன– நாம பத்திரிகைகளை வாசிப்பதோடு மாத்திரம நின்று விடாமல் அறிவை விருத்தி செய்யக் கூடிய நல்ல நூல்களையும சஞ்சிகைகளையும கூட வாசிக்கத் தவறக் கூடாது" என்றார்–

தொடர்ந்து மேற்படி இயக்கத்தின் தலைவர் ஜனாப் எம ஏ அபுல்ஹசன், சமூகசேவை உத்தியோகஸ்தர்கள் ஜனாப் எம ஏ எம ஹாசிம மற்றும பலரும உரையாற்றினர்

செயலாளர் ஜனாப் எம ஏ எம மொகிதீன் நன்றியுரை வழங்கினார்–

(ல–035)

## பதில் ஊழியருக்கும் பட்ஜட் சம்பள உயர்வு வழஙகக் கோரிக்கை

கொழுமபு, ஏப் 3

உள்ளூராட்சி சபைகளில் அவசர தேவைகளுக்காக கடமையில் ஈடுபடுத்தப்படும பதில் ஊழியர்களுக்கும அதிகரிக்கப்பட்ட 200 ரூபா சமபள உயர்வு வழஙகப்படல் வேண்டும–

ஐக்கிய இலஙகை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சஙகம, இவ்வாறு அரசைக் கோரியுள்ளது–

மேற்படி சஙகத்தின் பொதுக் காரியதரிசி திரு தே முனியாண்டி இது குறித்து பொது நிர்வாக உள்ளூராட்சி மற்றும மாகாண சபைகள் முன்னாள் அமைச்சர் திரு யூ பி விஜேகோனுக்கு அவசர கடிதம ஒன்றையும அனுப்பி வைத்தார்–

உள்ளூராட்சி மன்றஙகளைச் சேர்ந்த மின்சார பகுதி, நீர் விநியோகப் பகுதி, சுகாதாரப் பகுதி ஊழியர்கள் கடமைக்கு வராத விடுமுறை நாட்களில் அத்தியாவசிய சேவையின் கீழ் அஙகு பதில் ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்–

ஆனால் அவர்களுக்கு 200 ரூபா சமபள அதிகரிப்பு வழஙகப் படுவதில்லை–

இதனால் மேற்படி ஊழியர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும பிரஸ்தாப சஙகம சுட்டிக்காட்டியுள்ளது–

(ல–ர)

## "தீனி"ன் போதனைகளை ஏற்று நடக்க வேண்டும்

### மௌலவி முஹியித்தீன் உரை

கொழுமபு, ஏப 3

"தீன்" என்னும சன்மார்க்கத்தை நாம முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும– தீனின் போதனைகளை ஏற்று நடக்க வேண்டும–

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம எம முஹியித்தீன் ஆலிம (பஹ்ஜி) இவ்வாறு கூறினார்–

அகில இலஙகை ஷாதுலிய்யா இளைஞர் இயக்க ஜமாஅத் பணிகள் கண்டி கட்டுக்கலை ஜுஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது–

அஙகு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்–

மௌலவி முஹியித்தீன் தொடர்ந்து கூறியதாவது—

"தீன்" என்பது முழுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டியதாகும–

"தீனு"டைய பணியைக் குறிப்பிட்ட ஒரு இயக்கம தான் செய்ய வேண்டும; அல்லது அவர்களுக்கு தான் அப் பொறுப்பு சொந்தம என்பதில்லை–

தரீக்காக்களை உருவாக்கிய சேகுமார்கள் செய்த "தீனு"டைய பணி மட்டிட முடியாது–

இன்று ஒரு கூட்டமாக வந்து தவ்வதுக்காக செயற்படுகின்றனர்–

ஆனால் சேகுமார்கள் தனியாக வந்து பல்லாயிரம மக்களை "தீனு"டைய வழிக்காக எடுத்தனர் என்றார்–

(ல–007)

## கொள்ளையர் கைவரிசை

கொழும்பு ஏப் 3

கொள்ளையர்கள் குமபஹாலியனகேமுல்ல என்ற இடத்தில் நான்கு வீடுகளில் சுமார் 57 ஆயிரம ரூபா பெறுமதியான நகைகளையும ரொக்கப் பணத்தையும அபகரித்துச் சென்றனர்.

இதே மாவட்டத்தைச் சேர்ந்த மனபேரிய என்ற இடத்தில் உள்ள மற்றுமொரு வீட்டில் 74 ஆயிரம ரூபா பெறுமதியான நகைகளும பணமும கொள்ளையடிக்கப்பட்டன.

அரசு விடுத்துள்ள அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது, ஆயுதம தாங்கிய அடையாளம காணப்படாத கோஷ்டியினரே இக்கொள்ளைகளில் ஈடுபட்டனர்.

இரத்தினபுரி பல்லேபெத்தையில் தர்மதாச என்ற நபர் இனந்தெரியாதோரினால் கொல்லப்பட்டார், கேகாலையில் தீவிரவாத சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்,

(ண–032)

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4451
— 1990 ஏப்ரல் 4 —

## புற்று நோய் தடுப்பும் சிறிமாவும்

புற்று நோய் மிகவும ஆபத்தானது. அதை முற்றாகக் குணப்படுத்த இன்று வழியில்லை.

அதனால் புற்று நோய் வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும.

புற்று நோய் தடுப்பு முயற்சியில் ஒவ்வொருவரும ஈடுபட வேண்டும. முன்னின்று உழைக்க வேண்டும என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

வெளிநாடுகளில் உள்ள பெரிய பல் தேசிய நிறுவனங்கள் நச்சுத்தன்மை வாய்ந்த ரசாயனப் பொருள்கள் பலவற்றை மூன்றாம உலக நாடுகளுக்கு அனுப்புகின்றன.

அதனாலேயே இலங்கையிலும மற்றும பல மூன்றாம உலக நாடுகளிலும பலர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு வருகிறார்கள் என்று திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறினார்.

நச்சுத் தன்மை வாய்ந்த ரசாயனப் பொருள்களை இலங்கைக்கு அனுப்பும பல் தேசிய நிறுவனங்களை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும ரசாயன உரக் கலவைகளும கூட நச்சுத் தன்மை வாய்ந்தவை.

அந்த உரக் கலவைகள் உற்பத்தி செய்யப்படும நாடுகளில் அவற்றை உபயோகிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அந்த உரக் கலவைகள் இலங்கையிலும மற்றும மூன்றாம உலக நாடுகளிலும கொட்டிக் குவிக்கப்படுகின்றன.

இலங்கை போன்ற நாடுகளில்

# ஜப்பானிய கார்களின் எதிர்காலம் எப்படி?

## தென் கொரியா கடும் போட்டி

கார் உற்பத்தியில் அமெரிக்கர்களை ஜப்பானியர்கள் அடித்தார்கள்! இன்று ஜப்பானைப் பின்னுக்குத் தள்ள முயன்று வருகிறது தென் கொரியா!

எதிர்வரும ஆண்டுகளில் தென்கொரிய கார் உற்பத்தித் துறையில் பெரும அபிவிருத்தியும புரட்சி மாற்றங்களும ஏற்படும என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை வீதிகளில் ஓடும ஜப்பானியக் கார்கள் ஓய்ந்து போகலாம. அந்த இடத்தை தென்கொரியக் கார்கள் பிடித்து விடலாம.

தென்கொரியாவின் முன்னணி கார் உற்பத்தி நிறுவனங்கள் அடுத்த நான்கு ஆண்டுகளில் பல கோடி டாலர்களை இத் துறையில் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளன.

புதிய தொழில் நுட்பங்களுடன் நவீன மாடல்களில் தென் கொரிய கார்கள் ஏற்றுமதிக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு மாத்திரம தென் கொரியாவில் 19 லட்சம வாகனங்கள் உருவாக்கப்பட்டன. இத்தொகை 1995 ஆம ஆண்டளவில் முப்பது லட்சமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2000 ஆம அண்டளவில் நாற்பது லட்சமாக இந்த எண்ணிக்கை உயரலாம.

தென் கொரியாவில் இருந்து ஏற்றுமதியாகும வாகனங்களில் பெருமபான்மையானவை அமெரிக்காவையே அடைகின்றன.

1988ஆம ஆண்டு ஆறு லட்சம கார்கள் 60 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இத்தொகையில் 90 சதவீதம அமெரிக்காவிலேயே விற்பனையாகியுள்ளன.

அமெரிக்காவில் ஜப்பானிய கார்களுக்கு நல்ல மதிப்பு உண்டு. அவற்றை கொரிய கார்கள் இனி விரட்டி விடலாமெனத் தெரிகிறது.

ஆனால் 1988 ஆம ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு 27 ஆயிரம கார்களே ஏற்றுமதியாகின. ஐரோப்பியர்கள் அமெரிக்கர்களைப் போல காசை வீசி எறிபவர்கள் அல்லர். தரம பார்த்து பொருட்களை வாங்கும மனப்பாங்கு கொண்டவர்கள். இதனால் கொரிய நாட்டு கார்களுக்கு அங்கு கிராக்கி இல்லை!

கொரிய நாட்டு கார்கள் சர்வதேச தரம கொண்டவை அல்ல! கார் உற்பத்திக்கு இன்றியமையாத பாகங்கள் இப்போதும வெளியில் இருந்து கொண்டுவரப்பட்டே கொரியாவில் வாகனங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால்தான் பெரும பணத்தை முதலீடு செய்து இத்துறையில் எதிர்வரும ஆண்டுகளில் பெரும முன்னேற்றம காணத் தென் கொரியர்கள் உறுதி பூண்டுள்ளனர்!

[ம—032]



## வை. எம். எம். ஏ. பொதுக் கூட்டம்

மத்திய தென்னக்குமபுர வை எம எம ஏ இயக்கத்தின் 16 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம அண்மையில் இயக்கச் செயலகத்தில் நடைபெற்றது.

மேற்படி இயக்கத்தின் புதிய தலைவராக ஜனாப் எம ராஸிக் தெரிவு செய்யப்பட்டார்.

தலைவராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஜனாப் ராஸிக் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம.

இயக்கச் செயலாளர் ஜனாப் ஏ ஏ எம நாகூர் பிச்சை, ஜனாப் ஹபீப் லெப்பை (முன்னாள் அதிபர்) ஆகியோரும படத்தில் காணப்படுகின்றனர்.

படம: ரஷீத் எம இமதியாஸ். (ஐ—099)

## தமிழ் மொழியை கற்பதற்கு தூண்டுதலாக விழாக்கள் நடைபெறுகின்றன

### — கல்வி அதிகாரி

வறக்காப்பொளை ஏப் 2

"தமிழ்மொழியை இன்பத் தேன்மொழி என்று அழைப்பதுண்டு! அமமொழியை நம மாணவர்கள் சிறப்பாகக் கற்பதற்கு ஓர் தூண்டுதலாகவே தமிழ் திறன் போட்டிகளும தமிழ் விழாக்களும நடைபெறுகின்றன.

இவ்வாறு மாவனல்லை தோட்டக் கல்வி பணியகக் கல்வி அதிகாரி ஜனாப் வை எல் எம வஹாப் கூறினார்.

மாவனல்லை பிரதேசப் பாடசாலைகளுக்கான தமிழ்த் திறன் போட்டிகளும தமிழ்த் தின விழாவும நூராணியா முஸ்லிம மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்!

இக் கூட்டத்தில் பேசிய கேகாலை கல்விப் பணியகக் கல்வி அதிகாரி ஜனாப் எம ஆர் எம மிஹனார் மாணவர்களிடையே தமிழ் மொழியை மேலோங்கச் செய்வதற்கும அவர்களிடையே மறைந்திருக்கும ஆற்றல்களை வெளிக்கொணரவும இப்படியான தமிழ்த் தினப்போட்டிகள் பெரிதும உதவி வருகின்றன.

இதன் நிமித்தம எமது மாவட்ட அதிபர்களும ஆசிரியர்களும மிகுந்த ஆர்வம காட்டி...

## வீடமைப்பு கடன்: நகரசபை நடவடிக்கை

கேகாலை ஏப் 2

கேகாலை நகர் அதிகார எல்லைக்குள் வதியும வருமானம குறைந்தவர்கள் தத்தமது வீடுகளை சீரமைக்க... களை நகர சபை ஏற்கனவே பொது மக்களிடம இருந்து கோரியுள்ளது.

(ஐ—197)

## தையல் பயிற்சி நிலையங்கள்

அக்குறணை, ஏப். 2

கண்டி மாவட்டத்தில் உள்ள ஹேவாஹெட்டைப் பகுதியில் சுயதொழில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கு முகமாகவும, அதிக தொழில் வாய்ப்பை கொண்டதுமான ஜுகி தையல் பயிற்சி நிலையங்கள் மூன்று கிராமங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்ட நாடாளுமன்ற பிரதிநிதி திரு மஹிந்த அபேகோனின் வேண்டுகோளின்படி 1989 ஆம ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் மூன்று லட்சத்து ஐமபதாயிரம ரூபா வழங்கப்பட்டுள்ளது.

(ஐ—411)

## தமிழ்த் தினவிழா நிகழ்ச்சிகள்

நீர்கொழும்பு, ஏப் 2

தமிழ்தின விழா நிகழ்ச்சிகள் அண்மையில் நீர்கொழும்பு விஜயரத்ன மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகள் கலந்து கொண்ட இவ்விழாவில் நீர்கொழும்பு மாநகர சபை மேயர் திரு சரத்சந்திர குணரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

(ஐ—223)

## செய்தித் திரட்டு

### மின்சாரத் தடை

வாழைச்சேனை, ஏப் 2

வாழைச்சேனைப் பகுதியில் கடந்த சில வாரங்களாக இரவு நேரங்களில் திடீர் மின்சாரத் தடை ஏற்பட்டு வருகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் தமது அன்றாடக் கடமைகளை சரிவரச் செய்ய முடியாமல் பெரும கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். (ஐ—மு)

### தராவீஹ் தொழுகை

புத்தளம, ஏப். 2

புத்தளம 4 ஆம வட்டாரத்திலுள்ள "சலீவபுரம வீடமைப்புத் திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பள்ளிவாசலில் இமமுறை தராவீஹ் தொழுகை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆண்களுக்கும பெண்களுக்குமாக தராவீஹ் தொழுகை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ—241)

### விசேட பூஜை

பதுளை, ஏப். 2

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் அரசியலில் 40 வருட பூர்த்தியை முன்னிட்டு அவருக்கு ஆசியும, நீண்ட ஆயுளும கூறும வகையில் பதுளை முதியங்கனை ரஜமகா விகாரையில் விசேட பூஜை ஒன்றை நடத்த ஊவா மாகாண சபை அளுநர் திரு திலக் ரட்னாயக ஏற்பாடு செய்துள்ளார்.

மேற்படி பூஜை எதிர்வரும 9 அம திகதி நடைபெறவுள்ளது. சகல அரசாங்க, கூட்டுத்தாபன, பாடசாலை போக்கு ... மக்களும இதில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ—037)

### வருடாந்த மகோற்சவம்

புங்குடுதீவு, ஏப். 2

பிரசித்தி பெற்ற ... மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம மார்ச் 29 அம திகதி வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரமபமாகித் தொடர்ந்து 18 தினங்களுக்கு நடைபெறும.

படும் ரசாயன உரக் கலவைகளும் கூட நச்சுத் தன்மை வாய்ந்தவை.

அந்த உரக் கலவைகள் உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் அவற்றை உபயோகிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அந்த உரக் கலவைகள் இலங்கையிலும் மற்றும் மூன்றாம் உலக நாடுகளிலும் கொட்டிக் குவிக்கப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விஷயத்தை உணராமல் இருப்பது துரதிஷ்டமாகும். நச்சுத் தன்மை வாய்ந்த உரக் கலவைகள் பலவற்றை அரசாங்க நிறுவனங்களே விவசாயிகளுக்கு விநியோகிக்கின்றன. அதுதான் விநோதம்.

புற்று நோய் வந்தால் மாற்ற முடியாது. அதனால் அந்த நோய் வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு மக்களுக்கு நன்றாக ஊட்டப்பட வேண்டும்.

எந்தெந்த விதங்களில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை சுகாதாரப் பகுதியினரும் பொதுமக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அனைவரும் அறிவுறுத்த வேண்டும் என்றும் திருமதி சிறிமா பண்டாரநாயகா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

புற்று நோயாளர்களுக்கு இன்று அளிக்கப்படும் சிகிச்சை, அவர்களின் பராமரிப்பு ஆகியவை குறித்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கவலை தெரிவித்திருக்கிறார்.

அப்பாவி நோயாளிகள் உயிர் வாழும் கடைசிக் காலத்திலாவது வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வசதி செய்ய வேண்டும்.

புற்று நோயாளர்களின் நல்வாழ்விலும் புற்று நோய் தடுப்பிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதற்காக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பாராட்டப்பட வேண்டியவர் ஆவர்.

தமிழ் விழாக்களும் நடைபெறுகின்றன.

இவ்வாறு மாவனல்லை தோட்டக் கல்வி பணியகக் கல்வி அதிகாரி ஜனாப் வை எல் எம் வஹாப் கூறினார்.

மாவனல்லை பிரதேசப் பாடசாலைகளுக்கான தமிழ்த் திறன் போட்டிகளும் தமிழ்த் தின விழாவும் நூராணியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது சான்றிதழ்

## பெண்களுக்கு குடிசைத் தொழில் பயிற்சி

அககுறணை, ஏப் 2

மத்திய மாகாணத்தில் வருடாந்தம் ஐநூறு (500) பெண்களுக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் குடிசைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இருபத்துமூன்று (23) மகளிர் நிலையங்களூடாக இப்பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. பயிற்சி முடிவில் மகளிர் சுயமாக தொழில் செய்து தமது குடும்ப வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்டிய உதவிகளும் வழங்கப்பட உள்ளன.

(ஐ-411)

## 343 மாணவர்கள் தெரிவு

புங்குடுதீவு, ஏப். 2

யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 343 மாணவர்கள் இவ்வாண்டு மகா பொல புலமைப் பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பண்டாரகமவில் நிகழும் மகாபொல — புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்ள விசேட பஸ்கள் மூலம் பண்டாரகம சென்றுள்ளனர்.

(ஐ-240)

கேகாலை கல்வி பணியகக் கல்வி அதிகாரி ஜனாப் எம் ஆர் எம் மிஹுனார் மாணவர்களிடையே தமிழ் மொழியை மேலோங்கச் செய்வதற்கும் அவர்களிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரவும் இப்படியான தமிழ்த் தினப்போட்டிகள் பெரிதும் உதவி வருகின்றன.

இதன் நிமித்தம் எமது மாவட்ட அதிபர்களும் ஆசிரியர்களும் மிகுந்த ஆர்வம் காட்டி மாணவர்களை வழி நடத்தி வருவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

இக் கூட்டத்தில் நூராணியா மகா வித்தியாலய அதிபர் ஜனாப் எம் எஸ் எம் நிஸார் மாவனல்லை ஸாஹிரா மத்திய கல்லூரி அதிபர் ஜனாப் வை எல் எம் ராசிக், பதுரிய்யா அதிபர் ஏ ஸி எம் ஹாஜா மொஹிதீன் பத்தாம்பிட்டிய முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஜனாப் எஸ் எச் எம் பாறூக் ஆகியோரும் பேசினர்.

மேற்படி விழாவை மாவனல்லை மாவட்ட அதிபர்களின் அனுசரணையுடன் நூராணியா மகா வித்தியாலய அதிபரும் ஆசிரியர் மாணவர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

(ஐ-333)

# வீடமைப்பு கடன்: நகரசபை நடவடிக்கை

கேகாலை ஏப் 2

கேகாலை நகர் அதிகார எல்லைக்குள் வதியும் வருமானம் குறைந்தவர்கள் தத்தமது வீடுகளை சீரமைக்கவும் சொந்தக் காணிகளில் வசிப்போர் வீடுகளை அமைத்துக் கொள்ளவும் கடனுதவிகளை வழங்குவதற்கும் கேகாலை நகர சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படும் என கேகாலை நகர பிதா திரு சேர்லி செனவிரத்ன கூறினார்.

நகர்ப் பிரதேசத்தில் காணியின்றி வாடகை வீடுகளில் வசிப்பவர்களுக்கு வேறு இடங்களில் காணித் துண்டுகள் பெற்றுக் கொடுக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை நகர சபை ஏற்கனவே பொது மக்களிடம் இருந்து கோரியுள்ளது.

(ஐ-197)

## புனித ரமழான் சிந்தனைகள்

இன்றைய ரமழான் சிந்தனையில் முஸ்லிம் சமுதாய ஒற்றுமை பற்றி ஆராய்வோம்!

ஓர் உடலின் உறுப்புக்களைப் போல் ஈமான் உடையவர்கள் பரஸ்பரம் அன்பு கருணை பாசம் கொண்டவர்களாய் இருப்பதை நீங்கள் காண்பீர்கள்!

உடலில் ஓர் அங்கம் நோயால் பாதிக்கப்பட்டால் உடல் முழுவதும் காய்ச்சலால் பற்றி எரிகிறது.

பிறகு உடம்பெல்லாம் சுற்று சுறுப்பு பெற்று அந்த அங்கத்திற்கே உதவி செய்ய ஓடி வருகிறது.

புகாரி முஸ்லிமில் சமுதாய ஒற்றுமை இவ்வாறு வலியுறுத்தப்படுகிறது.

அல்லாஹ்வை ஈமான் கொண்ட நாம் என்றும் ஒற்றுமைப்பட்டவர்களாகவே வாழ வேண்டும். அன்பும் பாசமும் நிலைபெற வேண்டும்.

இன்று நம்மில் பிரச்சினைகள் அதிகரிக்கக் காரணம் ஒற்றுமைப் பண்பு சீர்குலைந்து உள்ளதே தான்!

சிறிய சிறிய விவகாரங்களுக்காகவும் முஸ்லிம்கள் ஒற்றுமை நீங்கியவர்களாக இருக்கிறார்கள்.

ஊர் ரீதியாக — கிராம ரீதியாக — இயக்க ரீதியாக பிரிவினைகள் நிலவியே வருகின்றன.

உலகுக்கு ஒற்றுமையின் உயர்வை வெளிப்படுத்திக் காட்ட வேண்டியவர்கள் இவ்வாறு இருப்பது இஸ்லாமியப் பண்பு அல்ல!

ஈமான் கொண்டவர்கள் பரஸ்பரம் அன்பு கருணை பாசம் கொண்டவர்களாய் இருப்பதை நீங்கள் காண்பீர்கள் என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறி இருப்பது நம் கவனத்தில் ஆழப் பதிய வேண்டும்.

சகோதர வாஞ்சையுடன் வாழ்ந்து முன்மாதிரியான முஸ்லிம்களாக சிறக்க வல்ல அல்லாஹ் புனித ரமழானில் அருள் பாலிப்பானாக.

ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!!!

நோன்பின் நிய்யத்து

நவைத்து ஸவ்மகதின் அன் அதாஇ பர்ளி ரமழான் ஹாதிஹிஸ் ஸனதி லில்லாஹி தஆலா,

இந்த வருடத்தில் ரமழான் மாதத்தின் பர்ளான நோன்பை நிய்யத்து செய்கிறேன் அல்லாஹ்வுக்காக!

நோன்பு திறக்கும் துஆ

அல்லாஹும்ம லககுமது வபிக்க ஆமன்து வஅலைக்க தவக்கல்து வஅலா ரிஸ்கிக அப்தர்து வதகப்பல் மின்னீ!

யாஅல்லாஹ்! உனக்காகவே நோன்பு நோற்றேன்! உன்னையே விசுவாசிக்கிறேன்!

உன் ஆகாரத்தைக் கொண்டே நோன்பு திறந்தேன் ஆகவே நான் நோற்ற நோன்பை அங்கீகரித்த அருள் புரிவானாக ஆமீன்.

— எப் எம் பைரூஸ்

...மபு விஜயரத்ன மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகள் கலந்து கொண்ட இவ்விழாவில் நீர்கொழும்பு மாநகர சபை மேயர் திரு சரத்சந்திர குணரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

(ஐ-223)

## வருடாந்த மகோற்சவம்

புங்குடுதீவு, ஏப். 2

பிரசித்தி பெற்று விளங்கும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் மார்ச் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்களுக்கு நடைபெறும்.

இந்த மாதம் 14 ஆம் திகதி சித்திரைப் பத்தாண்டுக் தினத்தன்று காலை ரதோற்சவமும் 15 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இங்கு நடைபெறும்.

(ஐ-240)

## நடவடிக்கை

நீர்கொழும்பு, ஏப். 2

1990 ஆம் ஆண்டுக்கான வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நீர்கொழும்பு மாநகரசபை மேற்கொண்டு வருகின்றது.

மார்ச் 20 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையில் அதற்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபை வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் வழங்கினர்.

(ஐ-223)

## புதிய கட்டிடம்

அக்குறணை, ஏப். 2

கண்டி மாநகரத்தில் புதிதாக அமைக்கப்பட உள்ள இலங்கை வங்கியின் புதுக் கட்டிடம் கண்டிய பாரம்பரிய கட்டிடக் கலையின் வடிவமைப்பில் அமைய உள்ளது. கண்டி தலதா வீதியில் அமைய உள்ள இந்த இலங்கை வங்கி கட்டிடத் தொகுதிக்கு 60,000,000 லட்ச ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கண்டிய கட்டிட கலைப் பொலிவுடன் அமையும் இலங்கை வங்கி கட்டிடம் நகரின் மத்தியில் பல மாடிகளை கொண்டதாக அமைவது கண்டி நகருக்கு புதுப் பொலிவை ஏற்படுத்தும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-411)

### அட்டன் — தலவாக்கொல்லை

# குறைந்தளவு பஸ் சேவையால் மக்கள் சிரமம்

அட்டன் ஏப் 2

அட்டன் தலவாக்கொல்லை பாதையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான இ.போ.ச பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதனால் பொது மக்கள் குறித்த நேரத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல முடியாமல் பஸ் தரிப்பு நிலையங்களில் காத்துக் கிடக்க நேரிடுகிறது.

மேற்படி பாதையில் சேவையில் ஈடுபடும் தனியார் வாகனங்களிலும் சன நெரிசல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தமிழ் - சிங்கள புத்தாண்டு அண்மிக்கும் இச்சந்தர்ப்பதிலாவது அட்டன் தலவாக்கொல்லை பிரதேச வாழ் மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினை தீருமா என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

(ஐ-096)

# இஸ்ரவேலை குண்டு வீசி தகர்ப்போம்

## ஈராக் ஜனாதிபதி எச்சரிக்கை

பாக்தாத், ஏப்ரல் 3

**இஸ்ரவேல் எம்மைத் தாக்கினால் இரசாயன குண்டுகளைப் பயன்படுத்தி இஸ்ரவேலைத் தகர்ப்போம். இவ்வாறு ஈராக் ஜனாதிபதி சாதாம் ஹுசேன் திங்களன்று எச்சரிக்கை விடுத்தார்.**

ஈராக்குக்கெதிராக இஸ்ரவேல் செயல்படத் தலைப்பட்டால் இஸ்ரவேலின் அரைவாசிப் பகுதியினை தீயினால் அழிக்க விடுவோம என்றும அவர் தெரிவித்தார்.

பாக்தாத் வானொலியில் அவர் இதுபற்றி அறிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:—

எமக்கு அணுகுண்டு தேவையில்லை. எம்மிடம் இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன. அணுகுண்டு மூலம எமமை அச்சுறுத்த முயற்சிப்பவர்களுக்கு இரசாயன ஆயுதங்களால் பதிலடி கொடுப்போம.

1987 ஆண்டு முதல் இரசாயன குண்டுகளை நாம தயாரித்து வருகிறோம. என சதாம ஹுசேன் கூறினார்.

1981 ஆம ஆண்டு இஸ்ரவேல் போர்க்க விமானங்கள் ஈராக்குக்குச் சொந்தமான பாக்தாத் ஒசிராக் பகுதி அணு உலை மீது தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் அணு உலைக்கு பெரும சேதம ஏற்பட்டது.

அணுஆயுத கருவிகளை ஈராக் ஒற்றர் பிரிவு கொள்வனவு செய்ய முயன்றதாக பிரிட்டன் அமெரிக்கா சாட்டிய குற்றச்சாட்டுக்களை ஈராக் மறுத்துள்ளது.

எமமிடம போதியளவு இரசாயன ஆயுதங்கள் உள்ளன. அவை எமது பாதுகாப்புக்குப் போதுமானவை என ஈராக் தெரிவித்திருக்கிறது.

40 அணு ஆயுத கருவிகளைக் கடத்த முயன்றதாக ஈராக் விமானச் சேவை அதிகாரி ஒருவர் கடந்த வாரம நாடு கடத்தப்பட்டார். இது சமபந்தமாக பலர் கைது செய்யப்பட்டனர்.

இஸ்ரவேல், அமெரிக்கா, பிரிட்டன் உளவுப் பகுதியினர் கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாக ஈராக்கு அணுகுண்டுத் தயாரிப்புக்கு தேவையான யூரேனியத்தை விற்பனை செய்ய முயன்று வருகிறது எனவும ஈராக் தெரிவித்தது.

(ஏ)

## ஊ. நாயக ஆர்ப்பாட்டம் நேபாளத்தில தொடர்கிறது

காத்மண்டு, ஏப் 3

ஜனநாயக ஆர்ப்பாட்டங்கள் நேபாளத்தில் தொடர்ந்த வண்ணமுள்ளன. நான்காவது தினமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

காத்மண்டு சுற்று வட்டாரங்களான லலித்பூர், பட்டான் பகுதிகளில் சுலோகங்களைக் காட்டிய வண்ணம எதிர்ப்பு நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இருவர் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகியுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்து வைத்திருப்போரை விடுவிக்க கோரி அரசாங்க டாக்டர்கள் பலர் திங்களன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வெள்ளியன்று இடம்பெற்ற கொலைகளையடுத்து பல கடைகள் காத்மண்டுவில் திங்களன்றும மூடிக்கிடந்தன.

(ஏ)

## சோவியத் யூத குடியேற்றம் தாட்சரின் கருத்துக்கு

### ப. விடுதலை இயக்கம் வரவேற்பு

டியுனிஸ், ஏப் 3

இஸ்ரவேல் கைப்பற்றியிருக்கும எல்லைப் பகுதிகளில் சோவியத் யூத குடியேற்றம சட்ட விரோதமானது என பிரிட்டிஷ் பிரதமர் மாகிரட் தாட்சர் தெரிவித்துள்ளார். இதனை பலஸ்தீன விடுதலை இயக்கம வரவேற்றுள்ளது.

குவைத் பத்திரிகைகள் இரண்டிற்கு தாட்சர் பேட்டியளித்திருந்தார். அந்தப் பேட்டியிலேயே இதுபற்றி அவர் தெரிவித்திருக்கிறார்.

மேற்கு கரையோரம, காஸா தொடுவாய், அரப கிழக்கு ஜெருசலெம ஆகிய பகுதிகளில் சோவியத் யூதர்களைக் குடியேற்றுவது சட்ட விரோதமான செயல். அவ்வாறு செய்வதால் சமாதானம சீர்குலையும இவ்வாறு தாட்சர் தமது பேட்டிகளில் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்தின் அரசியல் ஆலோசகர் பாஸாம அபு ஷாரீப் தாட்சருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். "நீங்கள் கூறியிருக்கும கருத்தை நாம முற்று முழுதாக வரவேற்கின்றோம" என அவர் தெரிவித்திருக்கிறார்.

## ஆப்கன் சதிப் புரட்சி 623 பேர் கைது

இஸ்லாமாபாத், ஏப் 3

ஆப்கானிஸ்தான் சதிப்புரட்சியில் சமபந்தப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 623 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம ஆப்கன் பாதுகாப்பு அமைச்சர் ஷா நவாஸ் தனாய் அரசைக் கவிழ்ப்பதற்கான சதிப் புரட்சியொன்றை வழி நடத்தினார்.

இந்தப் புரட்சியின் எதிரொலியாக 623 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக காபூல் வானொலி அறிவித்தது.

சதிப் புரட்சி தோல்வியுற்றதும தனாய் தப்பியோடினார். இவரோடு மொத்தம 30 பேர் தப்பி ஓடியதாக அறிவிக்கப்படுகிறது.

தனாய பாகிஸ்தானுக்கு தப்பி ஓடியதாக காபூல் சாட்டிய குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்திருக்கிறது.

(ஏ)

# உலகச் செய்திகள்

## கி. ஜெர்மன் சோஷலிச கட்சி தலைவர் ராஜினாமா

கிழக்கு பேர்லின் ஏப் 3

கிழக்கு ஜெர்மன் சோஷலிச ஜனநாயகக் கட்சித் தலைவர் (எஸ் பி டி) தமது பதவிகளிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

இரகசியப் பொலீஸ் பிரிவுடன் இவருக்கு தொடர்பிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதனை அடுத்தே இவர் ராஜினாமாச் செய்துள்ளார்.

கட்சித் தலைவர் பொஹ்மே கட்சி உயர் பீடத்துக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் தம மீதான குற்றச்சாட்டுப் பற்றி நன்கு ஆராயுமாறு தெரிவித்துள்ளார். வீண் குற்றங்களைச் சுமந்து கொண்டு கட்சித் தலைவராக இயங்குவது ஏனையோருக்கும ஒரு சுமை என நான் கருதுகிறேன். அதனாலேயே எனது பதவியை விட்டு விலகுகிறேன் என அவர் தெரிவித்தார்.

## வங்காளதேசம்: கடும் புயலுக்கு 166 பேர் பலி

டாக்கா ஏப் 3

வங்காளதேசத்தில் வீசிய கடும் புயலுக்கு 166 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த ஒன்பது தினங்களுக்குள் 1,600 க்கு மேற்பட்டோர் [illegible]

## தெ. ஆபிரிக்கா

## நேட்டால் மாகாண மோதல்: தீர்ப்பதற்கு ஜனாதிபதி முயற்சி

கேப்டவுன் ஏப் 3

தென் ஆபிரிக்காவின் நேட்டால் மாகாணத்தின் பிரச்சினைக்கு முடிவு காணும முயற்சி ஜனாதிபதி எப் டபிள்யூ டி கிளார்க்கால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கேப் டவுனில் நாடாளுமன்றத்தில் இதுபற்றி கிளார்க் அறிவித்தார்.

தெ ஆபிரிக்காவில் தேசிய காங்கிரஸ் மீதான தடை பெப்ரவரி 2 ஆம் நீக்கப்பட்டது. அன்று முதல் இடமபெற்று வரும வன்முறைகளை தடுக்க முடியாதிருக்கிறது. இது விடயத்தில் பொலீஸார் கடுமையைக் கடைப்பிடிக்க வேண்டும என கிளார்க் கேட்டிருந்தார்.

நேட்டால் மாகாண வன்முறைகளால் 3000க்கு அதிகமானோர் கடந்த 3 ஆண்டு காலங்களில் பலியாகியுள்ளனர். இது அதிர்ச்சிகுரியதாக இருக்கிறது என கிளார்க் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண கூட்டிணைந்த பாதுகாப்புத் திட்டமொன்று வழங்கப்படும. அனைத்துக் கட்சி அடிப்படையிலான திட்டம் இன்று முதல் அமுலுக்குக் கொண்டு வரப்படும. இவ்வாறு கிளார்க் தெரிவித்தார்.

பாதைத் தடைகள் மேற்கொள்வது, வீதிகளில் ரோந்து புரிவது - சுற்று வட்டாரங்களில் வாகனங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது, விமானங்களையும இந்தப் பணிக்கு ஈடுபடுத்துவது என்பன இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஏ)

## பிலிப்பைன்ஸில் கம்யூனிஸ்ட் மோதல்களில்

## போதைப் பொருள் ஒழிப்புக்கு போராட்டம் நடத்த வலியுறுத்து

இஸ்லாமாபாத் ஏப் 3

உலக ஜனநாயகத்திற்கு போதைப் பொருட்கள் ஒரு பெரும சவாலாக உள்ளது. இதற்கெதிராக எல்லோரும சேர்ந்து ஒரு போராட்டம நடத்த வேண்டும.

இப்படி அமெரிக்காவின் மூத்த போதைப் பொருள் அதிகாரி மெல்வின் லெவிர்ஸ்கி கூறினார்.

இவர் மேலும கூறுமபோது போதைப் பொருளின் தேவையைக் குறைக்க எல்லோரும பாடுபட வேண்டும என்றார். ஆசியாவில் போதைப் பொருள் உற்பத்தி செய்யும நாடுகளுக்கு மெல்வின் மேற்கொண்ட விஜயத்தின்போது மேற்கண்டவாறு கூறினார்.

நாங்கள் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட பெனாஸீர் பூட்டோவின் அரசு சகலதும செய்யும என்ற நமபிக்கையுடன் இருக்கிறோம" என்று அவர் தெரிவித்தார்.

போதைவஸ்தால் தன்னால் அரசைக் கொண்டு நடத்த முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாக பெனாஸீர் வருத்தம தெரிவித்தார்.

போதைப் பொருள் உற்பத்தி

1,600 க்கு மேற்பட்டோர் உயரமான பாலிக்கு முன் வாசல் களையும் இழந்துள்ளனர்.

கட்டிடங்கள் இடிந்து விழுந்ததால் அநேகம் பேர் காயமடைந்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (எ)

அவர் தெரிவித்தார்.

கிறிஸ்தவ ஜனநாயகப் பிரிவு (சி டி யு) தலைவர் லொதார் டி மெய்ஸெரே மீதும் இதே போன்ற ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். (எ)

# கம்யூனிஸ்ட் மோதல்களில் பத்துப் பேர் பலி

மணிலா ஏப் 3

கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுடன் இலக்கோஸ் நோர்ட்டே மாகாணத்தில் ஏற்பட்ட புதிய மோதல்களில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டனர். கெரில்லாக்கள் இப்போது வட பிலிப்பைன்ஸை நோக்கித் தம் தாக்குதல்களை நகர்த்தியுள்ளனர்.

இராணுவத் தளபதி ரெனாட்டோ டி வில்லாவின் கூற்றுப்படி கடைசியாக பாகுயினில் எண்ணிக்கை தெரியாத கெரில்லாக்களுடன் வெறும் 100 கருப்பின மோதியதாகத் தெரிகிறது.

இதே வேளை அகுசான் டெல் சேரில் நடந்த இரண்டு நாள் மோதல்களின் பின்னர் துருப்பினர் 49 சடலங்களைக் கண்டு எடுத்துள்ளனர்.

ஆனால் சட்டவிரோதமாக்கப்பட்ட புதிய மக்கள் இராணுவம் தன்னுடைய தாக்குதல்களை இனிமேல் தமக்கெதிராகச் செயல்படும் ஜப்பானிய, அமெரிக்க தளங்களுக்கும் நகர்புறங்களுக்கும் நகர்த்தும் என்று எச்சரித்துள்ளது.

பிலிப்பைன்ஸில் அமெரிக்க இராணுவம் நிலை கொண்டுள்ளதால் தனது கொலைப் போரைத் தொடங்கியுள்ளதாக புரட்சித் தலைவர் றொமியுலோ கூறியிருக்கிறார். அண்மையில் குறைந்தது 6 அமெரிக்க தளத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டதாகவும் கூறினார். (எ—ரி)

5,000 க்கு மேற்பட்டோர் கைது

# போராட்டக்காரர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

காத்மண்டு ஏப் 3

நேபாளம் அரசுக்கு எதிராக ஊர்வலம் சென்ற 500க்கு அதிகமானோர் பொலிஸாரால் கலைக்கப்பட்டனர். பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

கடந்த பெப்ரவரியிலிருந்து இடம்பெற்று வரும் அரசுக்கு எதிரான ஜனநாயக மீட்பு போராட்டங்களில் 14 பேர் கொல்லப்பட்டும், நூற்றுக்கணக்கானோர் சிறையிலிடப்பட்டும் இருக்கின்றனர்.

மன்னர் விரேந்திராவின் அரசோ ஜனநாயக மீட்பு இயக்கத்தை கம்யூனிஸ்ட்டுகளின் கடத்தல் விவகாரம் என்கிறது.

காயமடைந்தவர்களை டாக்டர்கள் கவனிக்க மறுக்கின்றனர். அவசர சிகிச்சைக்குரியவர்கள் மாத்திரம் கவனிக்கப்படுகின்றனர்.

2300 எண்ணிக்கை கொண்ட டாக்டர்களின் சகாக்களில் 15 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் வைத்தியர்கள் தம் நாளாந்தக் கடமைகளில் ஈடுபட மறுக்கிறார்கள்.

கட்சி சார்பற்ற பஞ்சாயத்து தேர்தல்கள் ஜனநாயக மயமானது என்கிறார் மன்னர் விரேந்திரா. இதை மறுத்துச் செயல்படுகிறது ஜனநாயக மீட்பு இயக்கம். (எ—ரி)

# வேவு பார்த்த பெண்ணுக்கு ஆறு ஆண்டு சிறை

ஹைபா இஸ்ரவேல் ஏப் 3

இஸ்ரவேலில் குடியேறிய யூகோஸ்லாவிய பெண்ணான விக்டோரியா டேவிட் பலஸ்தீனிய இயக்கத்திற்காக உளவு பார்த்ததற்காக 6 வருடச் சிறைத் தண்டனை பெற்றார்.

தான் இஸ்ரவேல் இராணுவ நிலைகளை புகைப்படம் எடுத்ததாகவும் அவற்றை பலஸ்தீன இயக்கத்திற்கு அனுப்பியதாகவும் அப்பெண் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டார். எனவே அவருடைய சிறைவாசத்தில் 3 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்டன. (எ—ரி)

# அரபு சமாதான திட்டம் புதிதாக வகுக்கப்பட வேண்டும்

## மைக்கல் ஓவன் வலியுறுத்து

பேருட் ஏப் 3

புதிய அரபு சமாதானத் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென லெபனான் கிறிஸ்தவ ஜெனரல் மைக்கல் ஓவன் கேட்டிருக்கிறார்.

1989 ஆம் ஆண்டின் அரபு சமாதானத் திட்டம் மைக்கல் ஓவனால் நிராகரிக்கப்பட்டது.

அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் புதிய திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

லெபனானில் சுமார் 35 ஆயிரம் பேரை உள்ளடக்கிய இராணுவப் படை கமாண்டராக ஓவன் விளங்குகிறார்.

சவூதி அரேபியா - மொறக்கோ, அல்ஜீரியா - அரபு லீக் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு ஓவன் சமாதான ஒப்பந்தம் ஒன்று தொடர்பாக எழுதியுள்ளார். (எ)

இதுவரை என்பன இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. (எ)

பட வேண்டும் என்றார். ஆசியாவில் போதைப் பொருள் உற்பத்தி

வித்தார்.

போதைப் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் அதைக் குறைக்க அமெரிக்க ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளை மெல்லின் எடுத்துக் கூறினார்.

ஆசியாவில் போதைப் பொருள் உற்பத்தி பாகிஸ்தான் - ஆப்கான் ஈரான் ஆகிய நாடுகளிலேயே அபரிமிதமாகச் செய்யப்படுகின்றது. (எ—ரி)

# வாலிப முன்னணி சம்மேளனம் புனரமைப்பு

கொழும்பு, ஏப் 3

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் குருநாகல் மாவட்ட சம்மேளனம் புனரமைக்கப்பட்டது.

மாவட்ட சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் குருநாகல் ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் லீக் வாலிப முன்னணி பிராந்தியப் பணிப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான ஜனாப் ஏ எச் எம் அலவி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திலேயே மாவட்ட சம்மேளனம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

குருநாகல் மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளையும் புனரமைப்பு செய்து முஸ்லிம் சமூகத்துக்கு சேவை செய்யக் கூடிய இயக்காக மாற்றுவது என்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ல—007)

# கொழும்பு தேஸ்டன் இஸ்லாமிய தின கொண்டாட்டம்

கொழும்பு, ஏப் 3

கொழும்பு தேஸ்டன் கல்லூரி இஸ்லாமிய மஜ்லிஸ், அண்மையில் இஸ்லாமிய தினத்தைக் கொண்டாடியது.

கொழும்பு மாநகர சபை மேயர் அல்ஹாஜ் ஹுஸைன் முஹம்மத் இந்நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அல்ஹாஜ் ஹுஸைன் முஹம்மத் இவ்விழாவில் உரை நிகழ்த்தும் போது, "சிங்கள பாடசாலைகளில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்கள் ஏனைய மாணவர்களுடன் இணைந்து செயல்படுவது பாராட்டத்தக்கது" என்றார்.

அத்துடன் தேஸ்டன் கல்லூரி வளவினூடாக செல்லும் நகர சபை கால்வாயை துப்புரவு செய்து நிருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

தமது பாடசாலையில் பல சமயங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். அவர்கள் எவ்வித பேதமுமின்றி ஐக்கியமாக செயல்படுகின்றனர் என்று மேற்படி கல்லூரி அதிபர் திரு எச் டி ஹர்மன் பரேரா குறிப்பிட்டார்.

சனமார்க்க குருமார்கள் இங்கு இஸ்லாமிய சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வைபவத்தின் இறுதியில் கல்லூரியின் இஸ்லாமிய மஜ்லிஸ் பொறுப்பாசிரியை ஜனாபா பௌஸியா ஹனீபா நவ்பர்தீன் நன்றியுரை நிகழ்த்தினார். (ஐ-வ)

# உலமா சபை மாநாடு ரமழானுக்குப் பின்னர்

கொழும்பு, ஏப் 3

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் வருடாந்த மாநாடும் பொதுக் கூட்டமும் ரமழானுக்குப் பின்னர் நடைபெறும்.

இந்த மாநாட்டையும் பொதுக் கூட்டத்தையும் நடத்துவதற்காக ஒரு குழுவும் அமைக்கப்பட்டு உள்ளது.

இக்குழுவில் உலமாச் சபையின் பொதுச் செயலாளர் மௌலவி எம் ஜே எம் ரியாழ், மௌலவி ஏ ஸீ ஏ எம் புஹாரி, மௌலவி ஏ எம் ஏ அஸீஸ், மௌலவி எம் எம் ஏ முபாரக், மௌலவி ஏ ஸீ அகார் முஹம்மத் ஆகியோர் இடம் பெறுகின்றனர். (ல—007)

# விவசாயத் துறையில் பெண்கள் ஊக்குவிப்பு

## அமெ. அரசு ரூ. 2 கோடி வழங்கியது

கொழும்பு, ஏப் 3

விவசாயத் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அமெரிக்க அரசு இலங்கைக்கு இரண்டு கோடி ரூபாவை வழங்கியிருக்கிறது.

ஏற்கனவே பெண்களை விவசாயத்துறையில் ஈடுபடுத்தி ஊக்குவிக்கும் முகமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தை



கல்விப் பணிப்பாளர் திரு டி எஸ் இத்தமல்கொட, கண்டி மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி ரீ கே ஏக்கநாயக்க பணிப்பாளர் திரு ஆர் சிவசிதம்பரம், கண்டி பிரதம கல்வி அதிகாரி திரு கு இராசையா, கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை அதிபர் திரு ஜீ பீற்றர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்த போது எடுக்கப்பட்ட படத்தை முதலாவதாகவும், விழாவில் கலந்து கொண்ட பயிலுநர் ஆசிரியர் உட்பட மற்றும் ஆசிரியர்கள் அதிபர்கள் ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

[படங்கள் ஐ ஏ றஸாக்]

(ஐ-017)

மேலும் விஸ்தரிக்க இந்நிதி பயன்படுத்தப்படும்.

இம்மூன்று வருட கால அமெரிக்க உதவித் திட்டம் அக்றோமாட் அவுட்ரீச் பவுண்டேஷன் என்ற நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கூடிய உயர் பலன் தரக் கூடிய பயிர்ச்செய்கை கால்நடை அபிவிருத்தி, உணவு பதப்படுத்தல், சந்தைப்படுத்தல், விவசாய கழிவுகளைப் பயன்படுத்திக் கொள்ளல், விவசாய கைத்தொழில்கள் ஆகிய அம்சங்களில் இரண்டாயிரத்து 880 பெண்கள் பயிற்றுவிக்கப்படுவர்.

இதன் மூலம் விவசாய மற்றும் விவசாய கைத்தொழில் துறைகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்து கிராம பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பயிற்சித் திட்டம் முதலில் குருநாகல் மாகாணத்தின் 12 உதவி அரச அதிபர் பிரிவுகளில் அமுல் செய்யப்படும்.

பின்னர் படிப்படியாக ஏனைய பிரிவுகளுக்கு விஸ்தரிக்கப்படும் மூன்று வருட காலப்பகுதியில் 48 பயிற்சி வகுப்புகள் நடத்தி முடிக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது.

(ஐ-032)

## டேரீச்சம் பழம் விநியோகம்

பலாங்கொடை, ஏப் 2

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு இலங்கையின் சகல பள்ளிவாசல்களுக்கும் விநியோகிக்க சவூதி அரசாங்கத்தினரால் அன்பளிப்பு செய்யப்பட்ட பேரீச்சம் பழங்கள் பலாங்கொடை பள்ளிவாசல்களுக்கும் கிடைக்கப்பெற்றன.

இப்பகுதியிலுள்ள சகல பள்ளிவாசல்கள் மூலம் அந்தந்தப் பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்கு பேரீச்சம்பழம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிணங்க பலாங்கொடை டிரஸ்டி சபை பலாங்கொடை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதிகளான தென்னை, திகதுரை, கிரிமெடிதென்னை, தெரிகஸ்தலாவ, தங்கஸ்மண்டில, குமாரகம, மிரிஸ்வத்தை கொரக்கஹமட் முஸ்லிம் கொலனி, தும்பகொடை, பெட்டிகலை ஆகிய சகல பகுதிகளுக்கும் பேரீச்சம்பழம் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-038)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

## ரூ. 35 ஆயிரம் மோசடி செய்த நபர் விளக்க மறியலில்

கொழும்பு, ஏப் 3

மத்திய கிழக்கு நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி 35 ஆயிரம் ரூபா பண மோசடி செய்த நபர் ஒருவர் இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி பணமோசடி செய்த பிரஸ்தாப பிரதிவாதிக்கெதிராக பல நீதிமன்றங்களில் 37 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

அப்பீல் நீதிமன்றத்தினால் இவர் ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் அதன் பின்னர் இவர் வழக்குத் தவணைகளுக்காக நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கவில்லை, இதனால் அவருக்கெதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

பிரதிவாதிக்கு பிணை நின்றவர் பிரஸ்தாப நபரை பிடித்து அங்கொடை பொலீஸில் ஒப்படைத்தார். அங்கொடை பொலீஸார் இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதனையடுத்து இந்த வழக்கை இம்மாதம் 26 ஆம் திகதி வரை ஒத்தி வைத்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் திரு ஏ எஸ் எம பெர்னாண்டோ அதுவரை பிரதிவாதியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 1986 ஜூன் முதலாம் திகதி வரையிலான காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி மட்டக்குளியில் அருளானந்தன் மகேந்திரன் என்பவரிடம் 35 ஆயிரம் ரூபாவை பணமோசடி செய்தார் என்று குற்றச்சாட்டின் பேரிலேயே பிரதிவாதிக்கெதிரான வழக்கு தொடரப்பட்டது.

(ஐ-வ)

## முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்

— அஷ்ரப்

பேருவளை, ஏப் 2

"முஸ்லிம்கள் அனைவரும் எங்கிருந்தாலும் ஒற்றுமையாக வாழ வேண்டும்."

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனாப் எம் எச் எம் அஷ்ரப் இவ்வாறு தெரிவித்தார்.

பேருவளை - சீனன்கோட்டையில் "எம் ஐ எம் நௌபர் மாவத்தை" எனும் பெயரில் ஒரு புதிய பாதை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இது தொடர்பாக இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் ஜனாப் அஷ்ரப் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது—

"எல்லா முஸ்லிம்களும் எப்பொழுதும் ஐக்கியமாக வாழ வேண்டும். ஒற்றுமை என்ற கயிற்றை என்றும் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் இலங்கை வாழ் ஏனைய சமூகங்களுடனும் ஒற்றுமையாக இருப்பது அவசியம், பிரிவினை ஏற்படுத்தி பிளவுபட்டு ஒருபோதும் வாழ முனையக் கூடாது.

முஸ்லிம் வாலிப சகோதரர்கள், முதியவர்களுடன் சரி சமமாக வாழ வேண்டும். இளைஞர்கள் முதியவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்க வேண்டும்.

இன்று மர்ஹூம் எம் ஐ எம் நௌபர் என்பவரின் பெயரில் இந்தப் பாதை திறக்கப்பட்டுள்ளது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர் மட்டுமல்லர், ஒரு சிறந்த செயல் வீரரும் கூட. கடந்த வருடம் அகால மரணம் அடைந்த இவருடைய ஆத்மாவை, அல்லாஹ் ஏற்று பிழை பொறுத்து மன்னித்தருள வேண்டும்"

இப்படி ஜனாப் அஷ்ரப் கூறினார்.

(ஐ-040)

## யாத்திரிகர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

மஸ்கெலியா, ஏப் 2

சிவனொளிபாத மலைக்கு வருகின்ற யாத்திரிகர்களின் எண்ணிக்கை வழமையானதை விட இவ்வருடம் கூடுதலாக உள்ளது.

இவ்வருடம் பெரும் எண்ணிக்கையான யாத்திரீகர்கள் சமைக்கும் பாத்திரம், சமையற் பொருட்கள் ஆகியவற்றைத் தம்மோடேயே கொண்டு வருகின்றனர்.

ஆயினும் நல்லதண்ணிப் பிரதேசத்திலே கடைகளும், பெருமளவு திறக்கப்பட்டுள்ளன. அதிகரித்து வரும் யாத்திரீகர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களது பாதுகாப்பு, ஒழுங்கு நடவடிக்கைகளை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-409)

## தமிழ்ப் பாடசாலைகளுக்கு இந்த விழா ஓர் எடுத்துக்காட்டு

### ஆசிரியர் விழாவில் கல்விப் பணிப்பாளர்

கண்டி, ஏப் 2

"கண்டி மாவட்டத்தில் சகல தமிழ்ப் பாடசாலைகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு கண்டி இந்து கலாசார நிலைய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "ஆசிரியர் தினவிழா" நாட்டின் அனைத்து தமிழ்ப் பாடசாலைகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமையும்."

இப்படிப் பாராட்டிப் பேசினார் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் திரு [illegible] சிதம்பரம்.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பாடசாலைகளில் பணிபுரிந்த சுமார் 700 தமிழ் ஆசிரியர்களின் நலனைக் கருத்திற் கொண்டு இந்த ஆசிரியர் தினவிழா இடம்பெற்றது.

மாணவர்களுக்கு தமிழ் மொழி ஆற்றலை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்ற பாங்கில் ஆசிரியர்களுக்கு மத்தியிலே கவிதை, பட்டிமன்றம், அறிவரங்கு, ஆய்வரங்கு என்பன போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

[illegible] மல்கொட பேசுகையில்,

"ஆசிரியர்கள் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவற்றில் முதல் பணியாக தற்காலிக அதிபர்களாகப் பணிபுரிபவர்கள் சிலருக்கு நிரந்தர நியமனங்களை இவ்வருடம் முடிவதற்குள் கல்வி அமைச்சு வழங்கும்" என்றார்.

(ஐ-017)

இப்படிப் பாராட்டிப் பேசினார் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளரான திரு ஆர் சிவ

ரங்கு, கலையரங்கு என்பன போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்ச்சியில் மத்திய மாகாண கல்வி அமைச்சர் திரு எஸ் கே இராமநாதன், மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் திரு டி எஸ் இத்தமல்கொட, கண்டி மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி ரீ கே ஏக்கநாயக்க, மத்திய மாகாண சபை உறுப்பினர்களான திருவாளர்கள் வீ அண்ணாமலை, டபிள்யூ ரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அங்கு கல்விப் பணிப்பாளர் திரு சிவசிதம்பரம் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது—

"கண்டி மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளின் நலனுக்கு பல முன்னோடித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆசிரியர்களிடையே புரிந்துணர்வையும், செயல் திறனையும் உருவாக்க இதுபோன்ற திட்டங்கள் வழிவகுக்கின்றன.

ஆண்டுக்கு ஒருமுறையாவது சகல ஆசிரியர்களுக்கும் இவ்வாறு சந்திக்கும் வாய்ப்பை அகில இலங்கை ரீதியாக மாவட்ட ரீதியில் ஏற்படுத்துவார்களேயானால் அது மிக்க பயன் தரும்."

இப்படி அவர் மேலும் கூறினார்.

திரு வீ அண்ணாமலை இங்கு பேசுகையில்,

சுறுசுறுப்பில்லாத ஆசிரியர்களை ஊக்குவிக்கவும், பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவாகியுள்ள புதிய ஆசிரியர்களை அறிமுகப்படுத்தவும், ஆசிரியர் தினம் உதவுகின்றது என்றார்.

மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் திரு டி எஸ் இத்து

---

## தராவீஹ் தொழுகை

நீர்கொழும்பு, ஏப் 2

நீர்கொழும்பு பெரிய ஜும்மா பள்ளிவாசலில் இம்முறை உள்ளூர் ஹாபிஸ்களைக் கொண்டு தராவீஹ் தொழுகை நடத்தப்பட்டு வருகின்றது.

ஒரு நாளைக்கு ஒரு ஜுஸ் வீதம் ரமழான் மாதம் முழுவதிலும் திருக்குர்ஆன் முழுவதும் ஓதி தொழுகை நடத்தப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை நீர்கொழும்பு பெரிய ஜும்மாப் பள்ளிவாசல் நிருவாகிகள் ஏற்பாடு செய்துள்ளனர். (ஐ-223)

---

## ஹதீஸ் மஜ்லிஸ்

வாழைச்சேனை, ஏப். 2

புனித நோன்பு மாதத்தினை முன்னிட்டு வாழைச்சேனை ஜனாஸா நலன்புரிச் சங்கம் அதன் வை எம் எம் ஏ கிளையில் ஹதீஸ் மஜ்லிஸ் நிகழ்ச்சினை நோன்பு நாட்களில் தினமும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடத்தும்.

பிரபல மார்க்க உலமாக்கள் நாள் தோறும் பல்வேறு தலைப்புக்களில் இஸ்லாமிய சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவர்.

பெண்களுக்காக தராவீஹ் தொழுகைக்கான விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ஐ-மு)

---

# ஊரடங்கு உத்தரவுக்கு அநேகர் கீழ்ப்படிந்து நடந்தனர்

## மனுதாரர் தரப்பில் சாட்சியம்

கொழும்பு, ஏப் 3

ஜனாதிபதித் தேர்தல் காலமான 1988 டிசம்பர் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் மிகிந்தலை தொகுதியில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஊரடங்கு உத்தரவுக்கு அநேகமானோர் கீழ்ப்படிந்து நடந்தனர்—

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்கு விசாரணையின் போது மனுதாரர் தரப்பில் சாட்சியமளித்த தயானந்த லொக்கு பண்டார தனது சாட்சியத்தில் இப்படிக் குறிப்பிட்டார்—

திரு பிரேமதாச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று தெரிவித்து திருமதி பண்டாரநாயக்கா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க, நீதியரசர்கள் எச் டி தம்பையா, பி எஸ் டி சில்வா, எம் ஜமீல், ? இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது—

சாட்சியை சட்டத்தரணி எ பிள்யூ அமரசிங்க விசாரித்தார்—

சட்டத்தரணி— வாக்குகள் எண்ணப்படும் நிலையத்துக்கு சென்றிருந்தபோது மிகிந்தலையில் குறைவான வாக்குகள் பதிவாகியிருப்பதை நீர் அறிந்து கொண்டீரா?

சாட்சி— ஆம—

# ஜனாதிபதி தேர்தல் வழக்கு

சட்டத்தரணி— பின்மடுவ வாக்குச் சாவடியில் எத்தனை வாக்குகள் பதிவாகியிருந்தன?

சாட்சி— 907 பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் ஒன்று கூட அளிக்கப்பட்டிருக்கவில்லை— புள்ளிகுளம் சாவடியில் 12 வாக்குகள் பதிவாகியிருந்தன— லபுனோருவ சாவடியில் ஆயிரத்து 215 வாக்குகளில் ஒரு வாக்கு கூட அளிக்கப்படவில்லை— ஹொன்கிருமுள்ளிய சாவடியில் ஆயிரத்து 267 வாக்காளர்களில் ஒருவரும் வாக்களித்திருக்கவில்லை— கனுதிவியகம சாவடியில் ஆயிரத்து 49 வாக்குகளில் ஒரு வாக்கும் அளிக்கப்பட்டிருக்கவில்லை— ?னனேற சாவடியில் 715 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒரு வாக்கும் போடப்பட்டிருக்கவில்லை—

இச்சமயம் குறுக்கிட்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலக் மாரப்பன சாட்சியம் அளிக்கப்படும் விதம் ஏற்புடையதாக இல்லை என்று ஆட்சேபனை தெரிவித்தார்—

பரவலான பயமுறுத்தலுக்கு ஆதாரமாக குறைவான வாக்குப் பதிவை காட்டுவது சிரமமான பணி இரண்டு அல்லது மூன்று சாவடிகளில் நடைபெற்ற சம்பவங்களே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்—

இதற்கு பதிலளித்த சட்டத்தரணி அமரசிங்க மிகிந்தலையில் அமுலாக்கப்பட்டிருந்த சட்டத்துக்கு மாறான ஊரடங்கு காரணமாக வாக்காளர்களால் வாக்களிக்க முடியாதிருந்ததாகவும் இதனால் குறைவான வாக்குப் பதிவு இடம்பெற்றிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தமது ஆட்சேபனையில் மிகிந்தலையில் மொத்த வாக்கு எண்ணிக்கையே முக்கியம் என்றும் சில சாவடிகளில் அளிக்கப்பட்ட வாக்கு வீதம் அவசியமற்றது என்றும் தெரிவித்தார்—

சில சாவடிகளில் வாக்களிக்கப்படாமை [illegible] பரவலான பயமுறுத்தல் நிலைமை வெளிப்படுத்துவதாக இல்லை [illegible] குறிப்பிடப்பட்டுள்ள சாவடிகளில் அளிக்கப்பட்ட குறைந்த வாக்கு வீதம் பற்றி மட்டுமே என்னால் இங்கு விளக்கமளிக்க முடியும் என்று அவர் நீதிமன்றத்தில் கூறினார்

எல்லா சாவடிகளிலும் நடைபெற்ற வாக்குப் பதிவு குறித்து சாட்சியங்களை நீதிமன்றத்தில் நிறுத்தத் தான் தயார் என்று இச்சமயத்தில் குறுக்கிட்ட மனுதாரர் தரப்பு சட்டத்ரணி அமரசிங்க தெரிவித்தார்—

இப் பிரச்சினை தொடர்பாக நீதிமன்றத்தில் சட்டத்தரணி சொக்சி தன் கருத்தை தெரிவிக்கையில் ஒரு விடயத்தை நிரூபிக்க சாதாரண வழிமுறைகள் இருக்கையில் நீண்ட வழிமுறைகளில் நேரத்தை செலவிடக் கூடாது என்றார்—

இது தொடர்பான தனது முடிவை நீதிமன்றம் வெளியிட்டது— ஆட்சேபனை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் இடம்பெற்ற சாவடி தொடர்பான சாட்சியங்கள் விரிவாக விசாரணை [illegible] கப்படும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது,

சட்டத்தரணி அமரசிங்க— வாக்களிக்கும் தினத்தன்று நீர் வாக்குச் சாவடிகளுக்கு சென்று வந்தீரா?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— எங்கெங்கு சென்றீர்?

சாட்சி— மிகிந்தலை நகரில் அமைந்திருந்த ஒரு சாவடிகளுக்கு [illegible] சாவடிகளுக்கும் சென்றிருந்தேன்.

சட்டத்தரணி— நகரில் வாக்காளர்கள் காணப்பட்டனரா?

சாட்சி— ஆம—

சட்டத்தரணி— பின் எங்கு சென்றீர்?

சாட்சி— குஹாபத்தோயில் கமை சாவடிக்கு சென்று பார்த்த போது நூலைந்து வாக்காளர்களே காணப்பட்டனர்— பள்ளிமடுவ சாவடிக்கு செல்ல முயன்ற போது பொலீஸார் என்னைத் தடுத்தனர்—

சட்டத்தரணி— உமமுடைய கிராமத்தில் நீர் எங்கு சுவரொட்டிகளைக் கண்டீர்?

சாட்சி— பொது இடங்களில் மேலும் 5 கிராமங்களிலும் சுவரொட்டிகளைக் கண்டேன்—

சட்டத்தரணி— வெற்றில் என்ன எழுதப்பட்டிருந்தன?

சாட்சி— ஜே ஆரைக் கொலை செய், பிரேமதாசவை தேர்தலில் கலந்து கொள்ளாதே முதல் வாக்களிக்கும் நபரின் குடும்பம் கொலை செய்யப்படும் என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன—

சட்டத்தரணி— 18, 19 ஆம திகதி ஊரடங்கின் போது நீர் எவற்றை அவதானித்தீர்?

சாட்சி— அச்சம் காரணமாக மக்கள் சுதந்திரமாக நடமாட முன்வரவில்லை—

சட்டத்தரணி— ஜே ஆர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராக இருந்ததால் அக் கட்சி ஆதரவாளர்களும் அச்சமுற்றிருக்கக் கூடுமா?

சாட்சி— ஏனையோர் பற்றி கூறுவது சிரமமான காரியம—

பிரதம நீதியரசர்— உம்மைப் பற்றி நீர் பேசும்

சாட்சி— [illegible] கண்டு நான் [illegible]

சட்டத்தரணி— நீர் ஐக்கிய தேசியக் கட்சி [illegible] தேர்ந்திருந்தீரா?

சாட்சி— [illegible]

விசாரணை [illegible] நீண்டும் [illegible]

[ந-032]

# பாடசாலைகளுக்கிடையே உதைபந்து போட்டி

## நூற்றுக்குமதிக அணிகள் பங்கு

கொழும்பு ஏப் 3

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகிறது, இப்போட்டியில் நாடெங்கும் உள்ள நூற்றுக்கும் மேலான உதைபந்தாட்ட அணிகள் கலந்து கொள்கின்றன.

12 வயது 14, 16 மற்றும் 18 வயதுக்கிடைப்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் இப்பாடசாலை மாணவ உதைபந்தாட்டப் போட்டியை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது, கல்வி அமைச்சும் நெஸ்லே லங்கா நிறுவனமும் இப்போட்டிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளன,

இலங்கையில் உதைபந்தாட்டம் 50 ஆம் மற்றும் 60 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உன்னத நிலையில் இருந்தது, அச்சமயம் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஈடாக இலங்கையின் உதைபந்தாட்டத்துறை விளங்கியது, மேலும் ஆசிய பிராந்திய ஆட்டங்களில் இலங்கை அணியினர் பர்மிய மற்றும் தாய்லாந்த அணிகளை வெற்றி கொள்ளவும் செய்தனர்.


இவ்வாறான ஒரு உயர் நிலையை மீண்டும் இலங்கை உதைபந்தாட்டத்துறைக்கு பெற்றுத்தர வேண்டும் என்ற முனைப்புடனேயே இளம் பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாட்டத்தில் பயிற்சியையும் அனுபவத்தையும் ஏற்படுத்தும் வகையில் இப்பாடசாலை உதைபந்தாட்டப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று உதைபந்தாட்ட சம்மேளன உதவித் தலைவர் டிரெவர் ரெக்கர்மான் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்டத்தின் தரத்தை உயர்த்துவதற்கு தனக்கு நான்கு ஆண்டு கால அவகாசம் வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

இப்பாடசாலை ஆட்டங்களின் மூலம் உதைபந்தாட்டத்தை கிராம மட்டத்தில் அறிமுகப் படுத்தக் கூடியதாக இருக்கும் என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இம்மாணவ உதைபந்தாட்டப்போட்டி நாட்டின் உதைபந்தாட்டத்துறையில் விழிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.

(எ-032)



### வெற்றிக்கிண்ணம் பரிசு

தெல்தெனிய குமுக்கந்துறை முஸ்லிம் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது-

வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு கண்டி மாவட்ட விளையாட்டு- உடற்கல்வித் துறைக் கல்வி அதிகாரி ஜனாபா வீ எச் ஹலீல் வெற்றிக் கிண்ணம ஒன்றை வழங்கும் போது பிடிக்கப்பட்ட படம்- (எ-431)

படம- ஜே எம ஹாபீஸ்

## உதைபந்து லீக் தலைவராக மீண்டும் செரிவு

கொழும்பு ஏப் 3

கொழும்பு நகர உதைபந்தாட்ட லீக் இவ்வாண்டுக்கான தமது தலைவராக எப் ஏ யாசீனை மீண்டும தெரிவு செய்துள்ளது,

கடந்த மாதம நடைபெற்ற வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் யாசினை 15 ஆவது ஆண்டாக மீண்டும லீக் உறுப்பினர்கள் தெரிவு செய்தனர்.

இக் கூட்டத்தில் எம எச் தாஜுதீன் ஜோதி மல்வராச்சி எம பிரேமதாச, எஸ் எம பி ஏ லத்திப், டி எம அமீர், என் எம ரமீஸ் எம கே மருது, வலன்டைன் பெர்னாண்டோ ஆகியோர் பதில் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்;

(எ-032)

## விளையாட்டு பகுதி

### முக்கோண கிரிக்கெட் போட்டி

பலாங்கொடை ஏப் 2

பலாங்கொடை "எசெக்ஸ்" விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் பலாங்கொடை ஜெய்லானி மத்திய கல்லூரி விளையாட்டரங்கிலே முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று நடைபெற்றது.

பலாங்கொடைப் பகுதியிலுள்ள "எசெக்ஸ் விளையாட்டுக் கழகம் - அல் ஜிஹாத் விளையாட்டுக் கழகம - யங் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம ஆகிய கழகங்கள் இந்த முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு கொண்டன. இதில் அல் ஜிஹாத் அணி வெற்றி பெற்றது.

அல் ஜிஹாத் அணி 13 ஓவர்களில் 1 விக்கெட் இழப்பிற்கு 57 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

சிறந்த துடுப்பாட்டக்காரராக ஜனாப் எம ஆர் எம பாரீஸ், சிறந்த பந்து வீச்சாளராக ஜனாப் எம எஸ் எம இஸ்திகாரும தெரிவு செய்யப் பட்டார்-

(எ-ரி-038)

### அரையிறுதி நோக்கி இல. அணி முன்னேறியது

கொழும்பு ஏப் 3

கொழும்பில் நடைபெற்ற ஆசிய கடற்பிரதேச நாடுகளுக்கான இரண்டாம பிரிவுகால் இறுதி டேவிஸ் போட்டியில் இலங்கை அணி பஹ்ரேன் அணியைத் தோற்கடித்த அரையிறுதியை நோக்கி முன்னேறியுள்ளது.

இலங்கை அணியினர் நான்கு ஆட்டங்களில் வெற்றியீட்டி அரையிறுதிக்கு தமமைத் தகுதி படுத்திக் கொண்டனர். அரை இறுதியாட்டம எதிர்வரும் ஜூன் 15 முதல் 17 ஆம திகதி வரை கொழும்பு டென்னிஸ் அரங்கில் நடத்தப்படும வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குவைத் அல்லது தாய்லாந்து அணியை இலங்கை அணி அரை இறுதியாட்டத்தில் சந்திக்கும,

இலங்கை அணி முதலாம மற்றும இரண்டாம ஒற்றையர் ஆட்டங்களிலும மற்றும இரட்டையர் ஆட்டத்திலும வெற்றியீட்டியது, பின்னர் ஒற்றையர் ரிவர்ஸ் ஆட்டத்தில் உமேஷ் வாலுப்பிள்ளை பாஹ்ரேன் அணியைச் சேர்ந்த நதிர் ஜப்பார் அப்துல் அலியைச் சந்தித்த வெற்றியைத் தனதாக்குக் கொண்டார்.

உமேஷ் வாலுப்பிள்ளை ஐந்து டேவிஸ் கிண்ண தெரிவாட்டங்களில் கலந்து கொண்டு ஏழு வெற்றிகளை இதுவரை கைப் பற்றியுள்ளார்.

இத்தெரிவாட்டத்தில் முதல் தடவையாகக் கலந்து கொண்ட சஞ்ஜய விஜேமான முழுநேர டென்னிஸ் போட்டி ஏற்படுத்தக் கூடிய உடல் மற்றும உளக் களைப்பை உணர்ந்து கொண்டார், ஆட்டத்தின் போது இரண்டு முறை வாந்தி எடுத்த அவர் கால் தசைப் பிடிப்புக்கும ஆளானார்.

பஹ்ரேன் அணியினர் காப்டன் கரீம இமமோதல் குறித்து கருத்து தெரிவிக்கையில் இலங்கை அணியினர் வெற்றி வாய்ப்புக்கு உரியவர்களே என்று கூறினார்,

(எ-032)

### கொம்ரெட்ஸ் உதைபந்தாட்ட சாம்பி[illegible]ாக தெரிவு

பதுளை, ஏப் 2

பதுளை கொமரெட்ஸ் கோஷ்டி, பதுளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு உதைபந்தாட்டச் சாமபியனாகத் தெரிவு செய்யப் பட்டது,

விளையாட்டு அமைச்சினரால் ஏற்பாடு செய்யப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகள் அண்மையில் பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

10 கோஷ்டிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டன, முதலாவது அரையிறுதிப் போட்டியில் கொமரெட்ஸ் கோஷ்டி ரிவர்சைட் கோஷ்டியை 5—0 கோல்களால் தோற்கடித்தது, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஊவா பிராந்தியப் போக்குவரத்துச் சபை கோஷ்டி ஓல்ட் ஆதியன்ஸ் கோஷ்டியை 1—0 கோல்களால் தோற்கடித்தது.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட கொமரெட்ஸ் கோஷ்டியும, ஊவா பிராந்தியப் போக்குவரத்துச் சபை கோஷ்டியும ஒரு கோலேனும போடத் தவறியதால் இரு கோஷ்டிக்கும தலா 5 பெனால்டி கோல்கள், வழங்கப்பட்டன.

கொமரெட்ஸ் கோஷ்டி 3 கோல்களைப் போட்டது, போக்குவரத்து சபை கோஷ்டி 2 கோல்களை மாத்திரமே போட்டது, இதன்படி கொமரெட்ஸ் கோஷ்டி சாமபியனானது,

(எ-037)

## விமான சேவைகள்

ஏப்ரல் 4 (புதன்கிழமை)

வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0540 | ரியாத் | யூ எல் 272 |
| 0635 | குவைத் | கே யூ 361 |
| 0650 | லண்டன் டுபாய் | யூ எல் 504 |
| 0710 | சிப்பல் தஹ்ரேன் கராச்சி | கே எல் 801 |
| 0745 | ஜித்தா தஹ்ரேன் | |
| 0710 | பாரீஸ், சூரிச், டுபாய் | யூ எல் 524 |
| 0725 | சிப்பல், பிராங்க் போர்ட் அபுதாபி | யூ எல் 568 |
| 0800 | டுபாய் | ஈ கே 800 |
| 0825 | குவைத் | யூ எல் 228 |
| 0905 | வியன்னா. மாலைதிவு | எல் டி 903 |
| 1030 | பிராங்க்போர்ட், மாலைதீவு | டி எப் 540 |
| 1040 | [illegible], டுபாய் | எல் இசட் 581 |
| 1055 | திருச்சி | யூ எல் 132 |

## வானொலி

4—4—1990

7-15 சமூகச் சித்திரம "ஊடுருவல்"

7-25 தஜ்வீத் வகுப்பு /தஜ்வீத் குறி வினாவிடைப் போட்டி

7-40 இஷாத் தொழுகைக்கான அஸான்

7-45 [illegible]

10-30 தவில் கச்சேரி வலங்கைமான் சண்முகசுந்தரம

10-45 பக்திப் பாடல்கள்

11-00 வயலின் - குன்னக்குடி வைத்தியநாதன்

12-00 [illegible] சேவை

12-45 செய்திகள்

## டெலிவிஷன்

## ஏப்ரல் 4 (புதன்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | | |
|---|---|---|---|
| 0540 | றியாத் | யூ எல் | 272 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன் டுபாய் | யூ எல் | 504 |
| 0710 | சிப்பல் தஹ்ரேன் கராச்சி | கே எல் | 801 |
| 0745 | ஜித்கா தஹ்ரேன் றியாத் | எஸ் வீ | 346 |
| 0845 | டுபாய் மாலைதீவு | ஈ கே | 802 |
| 1120 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1345 | மாலைதீவு டுபாய் | ஈ கே | 803 |
| 1925 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 2005 | சிங்கப்பூர் | யூ எல் | 303 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0100 | அபுதாபி பிராங்போர்ட் சிப்பல் | யூ எல் | 567 |
| 0125 | டுபாய் சூரிச் பாரிஸ் | யூ எல் | 523 |
| 0756 | குவைத் | கே யூ | 361 |
| 0830 | திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 0915 | ஜித்கா தஹ்ரேன் றியாத் | எஸ் வீ | 346 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் | 302 |
| 0930 | டுபாய். மாலைதீவு | ஈ கே | 802 |
| 1215 | மாலைதீவ | யூ எல் | 121 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1450 | மாலைதீவு டுபாய் | ஈ கே | 803 |
| 1530 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 1545 | சென்னை | யூ எல் | 121 |
| 1755 | பம்பாய் காராச்சி | யூ எல் | 181 |
| 1905 | காராச்சி தஹ்ரேன் சிப்பல் | கே எல் | 802 |
| 2055 | குவைத் | யூ எல் | 217 |
| 2155 | புச்சிரோகா நொரிடா | யூ எல் | 656 |

## ஏப்ரல் 5 (வியாழக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0525 | சூரிச். சார்ஜா மாலைதீவு | பி பி | 602 |
| 0535 | கராச்சி. பம்பாய் | யூ எல் | 182 |
| 0710 | [illegible] | | |
| 0725 | சிப்பல், பிராங்க் போர்ட் அபுதாபி | யூ எல் | 568 |
| 0800 | டுபாய் | ஈ கே | 800 |
| 0825 | குவைத் | யூ எல் | 228 |
| 0905 | வியன்னா. மாலைதீவு | எல் டி | 903 |
| 1030 | பிராங்க்போர்ட், மாலைதீவு | டி எப் | 540 |
| 1040 | [illegible], டுபாய் | எல் இசட் | 581 |
| 1055 | திருச்சி | யூ எல் | 132 |
| 1130 | [illegible] டஸ்கம, பேர்க் | எல் ரி | 724 |
| 1140 | சென்னை, திருவனந்தபுரம | ஐ சி | 573 |
| 1355 | கராச்சி | பி கே | 776 |
| 1415 | மாஸ்கோ, டுபாய் | எஸ் யூ | 545 |
| 1500 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ சி | 507 |
| 1530 | சென்னை | யூ எல் | 122 |
| 1610 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 1800 | திருச்சி. சென்னை | ஐ சி | 577 |
| 2005 | நொரிடா. புக்கி யோக்கா | யூ எல் | 457 |
| 2355 | ஹொங்கொங பாங்கொக் | யூ எல் | 423 |

### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ எல் | 503 |
| 0625 | சூரிச். சார்ஜா, மாலைதீவு | பி பி | 602 |
| 0805 | திருச்சி | யூ எல் | 131 |
| 0845 | பாங்கொக், ஹொங்கொங | யூ எல் | 622 |
| 0915 | டுபாய் | ஈ கே | 800 |
| 1030 | வியன்னா. மாலைதீவு | எல் டி | 903 |
| 1145 | பிராங்க்போர்ட், மாலைதீவு | டி எப் | 3540 |
| 1200 | சென்னை | யூ எல் | 121 |
| 1215 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 1315 | [illegible]போர்க், டஸ்கம பேர்க் | எல் ரி | 725 |
| 1235 | சென்னை, திருவனந்தபுரம | ஐ சி | 508 |
| 1505 | காராச்சி மாலைதீவு | பி கே | 776 |
| 1615 | மாஸ்கோ. டுபாய் | எஸ் யூ | 545 |
| 1540 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ சி | 578 |
| 1820 | தஹ்ரேன் | யூ எல் | 261 |
| 1840 | திருச்சி. சென்னை | ஐ சி | 574 |

குறிப்பு— யூ எல் — ஏயர் லங்கா. ஐ சி — இந்தியன் எயார் லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் ஏஸ் பி — ஏரோ புளொட். டீ எப் — தல்ப் எயர். யூ டீ — யூ டி ஏ. டி எப் — கொண்டோர் ஏஸ் கியூ — சிங்கப்பூர் எயார் லைன்ஸ். பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயார்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ் ரி ஜி — தாய் எயார் வேய்ஸ். பி பி — பால் எயர். எல் இஸட் — பிரத்தியேக சேவை. எல் டி — பிரத்தியேக சேவை. டி கே பிரத்தியேக சேவை. கே எல் —ரோயால் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் பற்றிய மேலதிக விபரம் அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 452218 (விமான நிலையம்)

## வானொலி

### 4—4—1990

அதிகாலை 2-45 முதல் 5 மணி வரை ஸஹர் விசேட நிகழ்ச்சி

காலை —

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — விஷ்ணு சகஸ்ரநாமம்
5-30 பாமாலை — திருமங்கையாழ்வார் அருட்பாசுரம
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
5-55 போதி மாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வீணை — ஞணி சங்கர சாஸ்திரி
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ்
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 கிளாரினட் — ஏ கே சி நடராஜன்
10-45 சிறுவர் பாடல்கள்
11-00 புல்லாங்குழல் — ரமணி
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேட முஸ்லிம நிகழ்ச்சி
6-30 அருளமுதம
6-45 மகாவலி நிகழ்ச்சி
7-00 இஸ்லாமிய கீதம பாடியவர்: ஏ எச் எம முஹிதீன்
7-15 சமூகச் சித்திரம "ஊடுருவல்"
7-25 தஜ்வீத் வகுப்பு / தஜ்வீத் குறி வினாவிடைப் போட்டி
7-40 இஷாத் தொழுகைக்கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்

இரவு —

8-00 களத்தமேடு — சஞ்சிகை நிகழ்ச்சி
8-15 குதமபம—நகைச்சுவை குறநாவல் குறநாடகங்கள்
8-45 மெல்லிசைப் பாடல்கள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலைப்பூங்கா
10-45 பஜன்
11-00 ஒளிபரப்பு முடிவு

### 5—4—1990

அதிகாலை 2-45 முதல் 5-00 மணி வரை ஸஹர் விசேட நிகழ்ச்சி

5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — பார்த்த சாதி சுப்ரபாதம
5-30 சாயி பஜன்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை மௌலவி ஏ எஸ் எம தாஹல் முனீர்
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 லயவின்யாசம மிருதங்கம எ ரகுநாதன்
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 சுபாஷா மலாயு மலாய் மஞ்சரி எம சுபா மஹ்மூர்
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 தவில் கச்சேரி வலங்கைமான் சண்முகசுந்தரம
10-45 பக்திப் பாடல்கள்
11-00 வயலின் — குன்னக்குடி வைத்தியநாதன்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இப்தார் விசேடமுஸ்லிம நிகழ்ச்சி
6-30 இந்து சமயப் பேச்சு — எங்கள் ஞானிகள் என்ற வரிசையில் யோகர் சுவாமிகள் — தமிழின்பம கணபதிப்பிள்ளை
6-45 பாவலர் — கொகுப்பு சில்லையூர் செல்வராஜன்
7-00 திருக்குர்ஆன் விளக்கம வழங்குபவர்— மௌலவி ஏ சி எல் எம செயின்
7-15 மார்க்க ஞாமிகள் வழங்குபவர்— மௌலவி எம எம அலி அக்பர்
7-25 சுக்கல விக்கக்கள் தொடர் பேச்சு வழங்குபவர்— கலாநிதி அல்ஹாஜ் எம ஏ எம சுக்ரி
7-35 கல்விக் குறி வினாவிடைப் போட்டி நடத்துபவர்: மௌலவி எம எம அரிப்
7-40 இஷாத் தொழுகைக்கான அஸான்
7-45 முஸ்லிம செய்திகள்
7-50 வரலாற்றில் [illegible] குறிப்பும ஸலவாத்தும
7-55 உலகச் செய்திகள்

இரவு —

8-00 வளரும பயிர் நடத்துபவர் ஹனா ஸ்ரீபிரகாசன்
8-15 கிராம சஞ்சிகை வீ ஏ சிவஞானம
8-45 மெல்லிசைப் பாடல்கள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலந்துரையாடல்
10-00 இசைக் கச்சேரி இசை [illegible] சிவானந்த [illegible]
11-00 ஒலிபரப்பு முடிவு

## டெலிவிஷன்

### 4—4—1990

### ரூபவாஹினி

9-00 கிருமமினும
9-15 தெலிதுட
9-40 திறந்தவெளி பல் நிகழ்ச்சி
10-05 நிர்வாகம
10-20 என் எச் கே பிலிம சிக்மன்ட் — தமிழ்
10-45 முத்துஹர வேதமஹல
11-10 360 டிக்ரீஸ்
11-35 ஒளிபரப்பு முடிவு

சேவை 1

9-10 நாடாளுமன்ற 2 ஆவது அமர்வு சிறப்பு நிகழ்ச்சி— நேரடி ஒளிபரப்பு
11-00 ஒளிபரப்பு முடிவு

சேவை 11

4-30 மென் அன்ட் மெஷின்ஸ்
5-00 செய்திகள் — ஆங்கிலம
5-15 "சாரமீர"
5-30 "ராக பாவம"
6-00 "மூ மணிகளுக்கு அஞ்சலி"
6-15 "உரை நிகழ்ச்சி"
6-30 செய்திகள் — தமிழ்
6-55 "எதிரொலி"
7-30 டார்ஸான்
8-00 செய்திகள் — சிங்களம
8-30 விளையாட்டு நிகழ்ச்சி
9-00 "த ரனிமுனர்ஸ்"
9-30 செய்திகள் — ஆங்கிலம
10-00 "த டுவலைற் ஸோன்"
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

6-00 "மூ மணிகளுக்கு அஞ்சலி"
6-15 தொக்ளிஷெல் பே
6-30 செய்திகள் — சிங்களம
6-45 சித்ர கீத்த
7-30 "டேஞ்சர் பே"
8-00 வெரயிட்டி வெரயிட்டி
8-25 "செவன கிமை புவத்"
8-55 "கோப்பி கடே"
9-30 [illegible]
10-00 செய்திகள் — ஆங்கிலம
10-26 [illegible] மெபொசியன் — தொடர்ச்சி

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

மலையகத்தில்

## பண்ணைசமுதாயம் உருவாக தமிழ் அமைச்சர்கள் உதவ வேண்டும்

### சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தின் "ஸ்ரீ ராம நவமி" விழாவில் வேலம்மாள் செல்லச்சாமி

கொழு

மூன்று தமிழ் அமைச்சர்களும மலையகத்தில் "பண்ணைச் சமுதாயம" ஒன்று உருவாக உதவ வேண்டும — நிச்சயமாக அவர்கள் உதவுவார்கள் என்று நமபுகிறேன்.

மேற்கண்டவாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை பமபலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற "ஸ்ரீராம நவமி விழா"வில் கலந்து கொண்டு பேசுகையில் மேல் மாகாண சபை உறுப்பினர் திருமதி வேலம்மாள் செல்லச்சாமி கூறினார்.

சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகத்தின் ஆதரவில் ஹரே கிருஷ்ணா இசை நாட்டிய கல்லூரி வழங்கிய ஸ்ரீராம நவமி விழாவில், இக்கழகத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் ஸ்ரீமான் மஹாகர்த்தகாஸ் வரவேற்புரை நிகழ்த்துகையில் —

இக்கழகம இலங்கையில் ஆற்றிவரும பணிகளைப் பற்றி விளக்கி கூறிய போது, மலைநாட்டிலே "பண்ணைச் சமுதாயம" ஒன்றை ஆரமபிக்க அதிலே பாற்பண்ணை, கைத்தொழில், பாடசாலை, அனாதை விடுதி, கிருஷ்ணாலயம போன்றவற்றை நிறுவப் பல ஏக்கர் காணி தேவைப்படுவதாகவும், இதற்கான இடத்தைப் பெற்றுத் தர எமது தமிழ் அமைச்சர்கள் முன்வர வேண்டும என்றும கேட்டுக் கொண்டார்.

இவ்வேண்டுகோளுக்கே திருமதி வேலம்மாள் செல்லச்சாமி தமிழ் அமைச்சர்கள் மூவரும உதவ வேண்டும என்று கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவின் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட இந்து சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ், கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமி ஆகிய இருவரும "பண்ணைச் சமுதாயம" உருவாகக் கருகளாலான உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தனர்!

இன்று இருநூறுக்கும அதிகமான நாடுகளில் ஹரே கிருஷ்ணா இயக்கத்தின் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன.

சோவியத் நாட்டிலும இவ் இயக்கத்தின் கிளை ஏற்படுத்தவுக்கு பகவான் கண்ணனின் கீதோபதேசம அந்நாட்டவரையும கவர்ந்துள்ளது.

இவ் இயக்கம ஆற்றிவரும பணிகள் பாராட்டத்தக்கவை மட்டுமின்றிப் பக்தியைப் பரப்பியும வருகின்றன.

அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த அக்கரைச் சீமையினர் அர்த்தமுள்ள இந்துமதக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு ஆத்திகர்களாக மாறி வருகிறார்கள் — ஆனால் நமமவரோ அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

பக்தி மார்க்கம ஒன்றுதான் நமமைப் பண்புள்ளவர்களாக மாற்றவல்லது — அதில் ஒன்று தான் இந்த ஹரே கிருஷ்ணா இயக்கமுமாகும.

அமைச்சர்கள் இருவரும திருமதி செல்லச்சாமியும தமது உரைகளில் மேற்கண்டவாறு கூறினர்.

ஈஸ்வரன் பிறதர்ஸ் இயக்குநர் திரு வி ரி வி டி ஈஸ்வரன் நன்றியுரை கூறினார்.

(ரு-24)

## அமைச்சில் பணியாற்றும் முஸ்லிம்கள் ஒழுங்காக தொழ வேண்டும் — அஸ்வர்

கொழும்பு, ஏப் 3

முஸ்லிம சமய, கலாசார விவகார ராஜாங்க அமைச்சில் பணியாற்றும சகல முஸ்லிமகளும ஒழுங்காகத் தொழுது வர வேண்டும.

முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் நேற்று முன்தினம இவ்வாறு கேட்டுக் கொண்டார்—

அமைச்சு அலுவலகளை அல்ஹாஜ் அஸ்வர் திறந்து...

ஹாஜி அஸ்வர் தமது பணிகளைத் திறமபட புரிய நாம பூரண ஒத்துழைப்பை அவருக்கு வழங்குவோம என்றார்.

முஸ்லிம சமய, கலாசார விவகாரப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம எம அன்ஸார் பேசுகையில்,

இஸ்லாமியப் பற்றும, சமூக வாஞ்சையும மிக்க அல்ஹாஜ் அஸ்வருக்கு அவரின் பணிகளில் நாம பூரண ஆதரவு கொடுப்போம என்றார்.

## பெஸ்டஸ் அமைச்சு பொறுப்பு ஏற்றார்

நீதி அமைச்சர் ஹமீதின் சிபாரிசில்

# 700 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு — ஜனாதிபதி வழங்கினார்

கொழும்பு ஏப் 3

புதிய நீதி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீதின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச 700 கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம முதன் முதலாக நீதி அமைச்சுக்கு விஜயம செய்து கடமைகளைப் பொறுப்பேற்ற அமைச்சர் ஹமீது முதன் முதலாக இக் கைதிகளின் விடுதலைக்கான சிபாரிசுக் கடிதத்திலேயே கையெழுத்திட்டார்—


இதனைத் தொடர்ந்து நாடெங்கிலும உள்ள சிறைச் சாலைகளில் இருந்த 700 கைதிகள் நேற்று முன்தினம விடுதலை செய்யப்பட்டனர்—

விடுதலை செய்யப்பட்டவர்களுள் பொலீஸ், இராணுவ, கடற்படை உத்தியோகத்தர்களும, கூட்டுறவுத்துறை மற்றும அரச ஊழியர்களும அடங்குகின்றனர்.

நீதி மன்றங்கள் மூலம தண்டனை விதிக்கப்பட்டு 1990 ஆம ஆண்டு டிசமபர் மாதம 31 ஆம திகதி அல்லது அதற்கு முன்னர் சிறைத்தண்டனையை பூர்த்தி செய்யும கைதிகளுக்கே இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனினும பயங்கரவாத தடைச்சட்டம், மற்றும போதைப்பொருள் தடுப்புச் சட்டம் என்பனவற்றின் கீழ தண்டனை அனுபவிப்பவர் சாலைகளில் இருந்த 700 கைதிகளுக்கு இந்த மன்னிப்பு வழங்கப்படவில்லை.

(ரு-ய)



வர்த்தகத்துறை அமைச்சர் ஏ ஆர் மன்சூர் தனது ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜனாப் குணசேகரவுடன் நேற்று முன்தினம தெவட்டகஹ முஸ்லிம பள்ளிவாசலுக்குச் சென்று மத வைபவங்களில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம—



மூன்று நாள் பெருவிழா நடத்திய

## விவேகானந்த சபையினரை பாராட்டுகிறேன் — தேவராஜ்

கொழும்பு, ஏப் 3

மூன்று தினங்கள் இம மண்டபத்தில் பெருவிழா ஒன்றினை ஒழுங்கு செய்து வெற்றி கண்ட விவேகானந்த சபையினரின் சாதனையை மனமாரப் பாராட்டுகின்றேன்.

கொழுமபு, விவேகானந்த சபை மண்டபத்தில் மூன்று தினங்கள் இடமபெற்ற "பண்ணும பரதமும" இசை நடன விழாவின் இறுதி நாளில் கலந்து கொண்ட அமைச்சர் பி பி தேவராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது—

மூன்று தினங்களும இசையும நடனமும தென்றலாக வீசின. இசைக்கலைஞர்கள் எமது உள்ளங்களை கொள்ளை கொள்ளச் செய்தன. ...கில் மேதை சின்னராசா தவில் சாகசங்களை செய்து காட்டினார்.

நடனமணிகளின் பாதச் சலங்கைகள் ஒலிக்கோலம காட்டின. காலை வேளைகளில், அறிஞர் பெருமக்கள் இசை மரபு பற்றியும, நாட்டுக் கூத்துகள் பற்றியும விரிவுரை நிகழ்த்தினார்கள்.

இராமநாதன் கல்லூரி மாணவ, மாணவியரின் "இராவணேசர்" கூத்து அருமையாக அமைக்கப்பட்டிருந்தது. விபுலானந்த இசைக் கல்லூரி மாணவியர் சிறந்த இசை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள்.

வீரமணி ஐயரின் "கலைஞன் கனவு" எனும நாட்டிய நாடகம ஒரு கலைஞனின் கனவினை சித்திரித்தது. பங்கு கொண்ட கலைஞர்களின் அபிநயமும முகபாவங்களும மனதினை ஈர்த்தன.

தமிழரின் பாரமபரிய கலைகள் வளர்வும மெருகு பெறவும வேண்டுமென்ற கனவுகள் நனவாகும என்ற நம்பிக்கையை இந்த இசை நடன விழா நமக்கு அளித்திருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்

(ரு

## பத்தாண்டு காலம் கூடுதல் பஸ்கள்

## பெஸ்டஸ் அமைச்சு பொறுப்பு ஏற்றார்

கொழும்பு, ஏப் 3

பொது நிர்வாக மற்றும உள்ளூராட்சி புதிய அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா நேற்று முன்தினம காலை அமைச்சுக்குச் சென்று தனது கடமையை பொறுப்பேற்றார்.

அமைச்சு ஊழியர்களினால் புதிய அமைச்சருக்கு வரவேற்பு உபசாரம அளிக்கப்பட்டது.

பிரித் ஓதப்பட்டு சமய அனுஷ்டானங்களும நடத்தப்பட்டன. (ந-ர)

## விக்டர் தென்னக்கோன் இறுதிக்கிரியை

முன்னாள் பிரதம நீதியரசர் திரு விக்டர் தென்னக்கோனின் இறுதிக் கிரியகள் நேற்று முன்தினம மாலை பொரளை கனத்தை பொது மயானத்தில் நடைபெற்றது.

பிரதம நீதியரசர் திரு பாரிந்த ரணசிங்க, அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி, நீதியரசர் திரு அனில் டி சில்வா, அரச சட்டத்தரணி திரு எச் டபிள்யூ ஜெயவர்த்தன, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு டபிள்யூ ஜே பெர்னாண்டோ உட்பட பல எம பிக்களும இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர். (ந-ர)

ஏ எச் எம அஸ்வர் நேற்று முன்தினம இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அமைச்சு அலுவல்களை அல்ஹாஜ் அஸ்வர் திங்கட்கிழமை காலை பொறுப்பேற்றுக் கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அமைச்சுக்கு வருகை தந்த அல்ஹாஜ் அஸ்வரை அமைச்சின் செயலாளர் ஜனாப் எஸ் எச் எம ஜெமீல், முஸ்லிம சமய, கலாசார பணிப்பாளர் அல்ஹாஜ் எம எம அன்ஸார் உட்பட அமைச்சின் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் இஸ்லாமிய முறைப்படி பன்னீர் தெளித்து "ஸைத்" ஓதி வரவேற்றனர்.

மௌலவி எம சீ எம இக்பால் (பாகவி)யும, கதீப் ஜெஸுலி சலாஹுத்தீனும "துஆ"ப் பிரார்த்தனை நடத்தினர்.

அதிகாரிகள் மத்தியில் தொடர்ந்து பேசிய ஹாஜி அஸ்வர்,

இறை இல்லங்களான பள்ளிவாசல் விவகாரங்கள் பொலீஸ் நிலையங்கள் வரை போவது எமக்குப் பண்பல்ல.

இதுபோன்ற நிலைமைகளை மாற்ற வேண்டும.

எமது விவகாரங்களை நாமே நமக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டும என்று கூறினார்.

ஒற்றுமை, புரிந்துணர்வு, நல் இணக்கம போன்றவற்றை சமூகங்களுக்கு இடையில் வளர்க்க ஜனாதிபதி பாடுபடுகின்றார் என்றும அவர் கூறினார்.

அமைச்சரை வரவேற்றுப் பேசிய முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜனாப் எஸ் எச் எம ஜெமீல்,

இஸ்லாமியப் பற்றும, சமூக வாஞ்சையும மிக்க அல்ஹாஜ் அஸ்வருக்கு அவரின் பணிகளில் நாம பூரண ஆதரவு கொடுப்போம என்றார்.

முஸ்லிம லீக் தலைவர் அல்ஹாஜ் டாக்டர் எம சீ எம கலீல் பேசுகையில்,

முஸ்லிம்கள் மத்தியில் மத்ரஸாக்கள் இருந்தாலும கலாசார, சமய பல்கலைக்கழகம ஒன்று இல்லை.

இதனை அமைக்க அமைச்சர் பாடுபட வேண்டும என்றார்.

போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் ஜனாப் யூ எல் எம பாரூக், வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனாப் எஸ் இஸட் எம மசூர் மௌலானா உட்பட பல பிரமுகர்களும இந்த வைபவத்தில் சமூகமளித்திருந்தனர். (ந-007)



முஸ்லிம சமய, கலாசார விவகார ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் கடந்த திங்கட்கிழமை காலை கொம்பனித்தெரு மலே வீதியிலுள்ள அமைச்சு அலுவலகத்துக்குச் சென்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அங்கு நடைபெற்ற விசேட "துஆ"ப் பிரார்த்தனையில் அமைச்சர் பங்கு கொண்ட போது பிடிக்கப்பட்ட படம.

படத்தில் இடமிருந்து வலமாக அமைச்சின் செயலாளர் ஜனாப் எஸ் எச் எம ஜெமீல், ஜனாப் மானா மக்கீன், மௌலவி எம சீ எம இக்பால், கதீப் ஜெஸுலி சலாஹுத்தீன், அல்ஹாஜ் அஸ்வர் ஆகியோரைக் காணலாம. (ந-007)

## மத்திய வங்கி ஊழியர் பிணையில் விடுதலை

கொழும்பு, ஏப் 3

மத்திய வங்கியில் வைக்கப்பட்டுள்ள பழைய பண நோட்டுகளைத் திருடினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் அவ்வங்கி ஊழியர் ஒருவர் கோட்டை நீதிமன்றத் தின் முன்னர் நிறுத்தப்பட்டார், நீதிமன்றம இவருக்கு பிணை வழங்கி விடுவித்தது.

பழைய பண நோட்டுகள் காணாமற் போன விடயம தொடர்பாக ஆராய்ந்துவரும பொலீஸார் சுமார் 15 ஆயிரம ரூபா பெறுமதியான பழைய நோட்டுகள் களவாடப்பட்டிருக்க வேண்டும என்று கருதுகின்றனர் உண்மையில் எவ்வளவு பண நோட்டுகள் காணாமற் போயின என்பதை உறுதி செய்யும வகையில் இப்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

ஒரு லட்ச ரூபா பெறுமதியான பழைய நோட்டுகள் கொண்ட கட்டுகளில் இருந்தே நோட்டுகள் மாயமாயுள்ளன என்றும இவை வேறு கட்டுகளில் மாறுப்பட்டிருக்கின்றன என்றும பொலீஸ் விசாரணைகள் மூலம தெரிய வந்துள்ளது.

பழைய பண நோட்டுகள் அழிக்கப்பட்டு விடுவது வழக்கம, ஆனால் அவை அழிக்கப்படுமுன்னர் மீண்டும ஒரு தடவை பணக் கட்டுகளை பரிசீலிப்பது என்று கணக்காய்வாளர் நாயகம திணைக்கள அதிகாரிகளும மத்திய வங்கி அதிகாரிகளும முடிவு செய்து செயலில் இறங்கிய போதே இப்பழைய பண நோட்டு மோசடி அமபலத்துக்கு வந்தது. (ல-032)

## தெஹிவளையில் சங்காபிஷேகம்

கொழும்பு, ஏப் 3

கொழும்பு, தெஹிவளை நெடுமால் ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணுமூர்த்தி ஆலயத்தில் எதிர்வரும 8ஆம திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை மகா சங்காபிஷேகம நடைபெறும.

அன்றைய தினம காலை 9 மணிக்கு யாக பூஜை, ஹோமம, தீபாராதனை என்பவற்றுடன் மகா சங்காபிஷேகமும நடைபெறும.

அதைத் தொடர்ந்து விசேஷ பூஜை, அன்னதானம என்பன இடம்பெறும. மாலை 5-30 மணிக்கு திருவூஞ்சல், சுவாமி வீதிவலம வருதல் என்பன இடம்பெறும.

பிரதிஷ்டா சிரோன்மணி பிரமமஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் விழாக் கிரியைகளை நடத்தி வைப்பார். (ந-ர)

## [illegible]ந்தாண்டு காலம் கூடுதல் பஸ்கள்

கொழும்பு, ஏப் 3

எதிர்வரும தமிழ் - சிங்கள புத்தாண்டுக் காலத்தின் போது இரண்டாயிர[illegible] போக்குவரத்து சபை பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படும.

போக்குவரத்து அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸின் பணிப்புரையின் பேரில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் இருந்து காலி, மாத்தறை, தங்காலை, அனுராதபுரம, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளுக்கு இரவு நேரங்களில் மேற்படி பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும.

இதேவேளை பொதுமக்களின் நன்மை கருதி ரயில் சேவையும விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதற்கும 22 ரயில்களை மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம முடிவு செய்துள்ளது. (ந-ர)

பதவி பெறும் பரீட்சையென

## விளம்பரம் செய்து பணம் திரட்டிய மோசடி நபர் கைது

கொழும்பிலுள்ள பெயர் பெற்ற மண்டபமொன்றில் சுள உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப் பரீட்சை நடத்தப்படும என்று பத்திரிகையில் விளமபரம செய்து ஒரு பரீட்சார்த்தியிடம நூறு ரூபா என்ற வீதப்படி லட்சக் கணக்கில் பணம சுருட்டிய மோசடி நபரை பொலீஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்நபர் தான் நிறுவனம ஒன்றின் பணிப்பாளர் என்று தமமை அறிமுகப்படுத்திக் கொண்டு இவ்விளமபரத்தை வெளியிட்டாராம.

சுள உத்தியோகத்தர் பதவிக்கான தகுதி காண் போட்டிப் பரீட்சை நடத்தப்படும என்றும விருமபுவோர் சுயமுகவரியிட்ட தபாலுறையுடன் நூறு ரூபா பெறுமதியான காசுக் கட்டளையையும அனுப்பி வைக்குமாறும இவ்விளமபரத்தில் கேட்கப்பட்டிருந்தது.

இவ்விளமபரத்தையடுத்து 15 ஆயிரத்துக்கும அதிகமானோர் மேற்படி நபரது விலாசத்துக்கு பணம அனுப்பி வைத்தனர்.

ஆனால் குறிப்பிட்ட தினத்தில் அமமண்டபத்தில் சுள உத்தியோகத்தர் தெரிவு பரீட்சை நடைபெறவில்லை, பரீட்சைக்குத் தயாராக வந்தவர்கள் ஏமாற்றமடைந்தனர். சிலர் நாரஹேன்பிட்டி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்

இச்சமபவம குறித்து பொலீஸார் மேலும விசாரணை செய்து வருகின்றனர். (ல-032)

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 [illegible] 1613 [illegible] வெளியிட்ட திகதி 4 எப்ரல் 1990

DINAPATHI, Gunasena Mawatha, Colo[illegible]
P. O Box 1613